௧௪௨
XIII. B. 4.
14499

உ
கடவுள்துணை

# சிவவாக்கியர்பாடல்.

இஃது

ம-ா-ா-ஸ்ரீ, அஷ்டாவதானம்
வீராசாமிசெட்டியார் அவர்கள் மருகரும்,
தொண்டைமண்டலம் கல்விச்சாலைத்
தமிழ்ப்புலவருமாகிய
வித்வான் ரு. அப்பன்செட்டியாரவர்கள்
மாணாக்கராகிய
மா. வடிவேலுமுதலியாரால்
முன் அச்சிட்டுள்ளவற்றோடு
வேறு ஏட்டுப்பிரதிகளில் அதிகமாகக்
கிடைக்கப்பட்டவைகளையுஞ் சேர்த்துப்
பரிசோதிக்கப்பட்டு,

---

சென்னை-புரசை
சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1896
Copy Right

இதன்விலை அணா - 4.

982

உ

கடவுள்துணை.

# சிவவாக்கியர்பாடல்.

இஃது

ம-ா-ா-ஸ்ரீ, அஷ்டாவதானம்
வீராசாமிசெட்டியார் அவர்கள் மருகரும்,
தொண்டைமண்டலம் கல்விச்சாலைத்
தமிழ்ப்புலவருமாகிய
வித்வான் கு. அப்பன்செட்டியாரவர்கள்
மாணாக்கராகிய

**மா. வடிவேலுமுதலியாரால்**

முன் அச்சிட்டுள்ளவற்றோடு
வேறு ஏட்டுப்பிரதிகளில் அதிகமாகக்
கிடைக்கப்பட்டவைகளையுஞ் சேர்த்துப்
பரிசோதிக்கப்பட்டு,

---

சென்னை-புரசை
சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1896.

Copy Right.

இதன்விலை அணு - 4.

# பிழை திருத்தம்.

| பக்கம் | பாட் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 1 | 1 | 2 | தூறுதேவ | நூறுதேவ |
| 3 | 18 | 3 | பாதகங்ஞூறு | பாதகங்சஞூறு |
| 5 | 29 | 5 | ஞானிகாள் | ஞானிகள் |
| 8 | 47 | 1 | வெண்ணெ | வெண்ணெய் |
| ,, | 48 | 4 | பொருதுமாற | பொருந்துமாற |
| 16 | 101 | 3 | வல்விராய் | வல்விரேல் |
| 24 | 161 | 2 | திங்களங்குரும்பை | தெங்கிளங்குரும்பை |
| 27 | 184 | 3 | கதவ;ஞு | கதவிஞு |
| 29 | 203 | 3 | சவத்தை | சலத்தை |
| 30 | 211 | 1 | ெருழியு | ஞெழியு |
| 42 | 300 | 2 | கம்புளத்தீ | சம்புளத் |
| 62 | 451 | 2 | யிருர்திராம | பிரிந்திராம |
| 70 | 505 | 2 | வெொடுத் | வேறிடத் |

## கிரியைவிலக்கல்.

நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லுமந்த்ரமேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ.

சுட்டசட்டிசட்டுவங் கறிச்சுவையறியுமோ=சமைத்த கறியின் உருசியை அந்தச் சட்டியுஞ், சட்டுவமாகிய கிளறும் பொருளுந் தெரிந்துகொள்ளுமோ? தெரிந்து கொள்ளாது. (அதுபோல) நாதன்உள்ளிருக்க பரம்பொருள் மனத்தின்கண்ணேயே யிருக்க அதைவிட்டு, நட்டகல்லை=சிற்பியினால் உருவமமைக்கப்பட்டு நாட்டிய தாதுப்பொருளை, தெய்வமென்று=சகல நிட்களாதீதமாகிய பரம்பொருளென்று நினைத்து, நாலுபுட்பஞ்சாத்தி=நான்குவகையாகிய மலர்களைத்தரித்து, சுற்றிவந்து மொணமொணென்று சொல்லு மந்திர மேதடா=முறைப்படி பிரதட்சணஞ்செய்து இருதயாதி கண்டாந்தத்துக்குள் தன்னுடைய அறிவுக்கு மாத்திரம் அறியப்படும் மத்திமை வாக்கினால் சொல்லும் மந்திரம் எங்குள்ளது, (இப்படியிருக்கையால்) நட்டகல்லும் பேசுமோ=நடப்பட்ட சிலாரூபமானது பேசக்கூடியதோ? அன்றென்றபடி,

ஆயினும், இவ்விஷயம் பாரமார்த்திகர்க்கேயன்றி, ஏனையோர்க்கன்று. இஃதறியாத சிலர் இவ்வாறு சொல்லுகின்றதேயென்று, பாரமார்த்திகத் தன்மையை யடைந்தவர்போன்று நடித்துச் சிலாரூபத்தை வணங்குதற்கேதுவாகிய அன்பையிழந்து அலைந்து, தத்தமக்கேற்றவண்ணம் பேசித்திரிகின்றனர். அது நிற்க,

இனி, இச்செய்யுளின் கருத்தை வியவகாரத் தன்மையுளார்க்கே என்று விளக்குதும். எப்படியெனில்:—வேதமுதலியகலைகளிற் சொல்லப்படுவது, துவிதம்,அத்துவிதம், என்கிற, இரண்டுமார்க்கங்களே, அவற்றில், துவிதமே, அத்துவிதத்திற்கு, முதற்காரணமாயுள்ளது. அம்மார்க்கத்தில் ஒவ்வொருவரும், பதி, பசு, பாசங்களை விசாரிக்க வேண்டிய அவசியமுளது, அப்படி விசாரிக்குங்கால், பதி,நிர்மலமுடையவனென்றும், பசு,தனக்குள்ள பாசமாகிய சகசமலத்தால், அநிர்மலனென்றும், விளங்கும். அங்ஙனமுள்ள மலத்தைப் போக்கிக்கொள்ளுதற் பொருட்டே, பதியானவர், அப்பசுவுக்குத், தநு, கரண, புவன, போகங்களை நல்கி, கருடோஹம்பாவனை செய்வோனுக்கு, அக்கருடன் இலனாய் நின்று,

விஷங்களைத் தீர்த்தானேயொழிய, இவனது பாவனையொன்றினாலேயே தீர்த்துக்கொள்ளாமை போலவும், இரசவாதஞ்செய்வோன், செம்பிலுள்ள களிம்பைப்போக்கப் பிரயத்தனஞ்செய்தானேயொழிய, இவனது பிரயத்தனம்,களிம்பைப் போக்காமல், மருந்தின்காரமே, அக்களிம்பை, உள்ளேயே அடங்கச் செய்தமைபோலவும், தான் கலவாமற் கலந்து நின்று,அச்சகசமலத்தின் வலிமையை அடக்கித் தன்னடிப்படுத்த நியமித்தமார்க்கங்கள் நான்கு, அவையாவன:—சரியை, கிரியை, யோகம், ஞானம். இந்நான்கும் ஒவ்வொன்றில்,நந்நான்காகப்பதினாறாகும், அங்ஙனம்கூறிய பதினாறில், இச்செய்யுட்கருத்து, கிரியையில் ஞானமாகும். எப்படியெனில், சர்வ பரிபூரணனென்னுந் திருப்பெயரை விசாரிக்கின்,எங்குநிறைந்தவனென்று புலப்படும். அங்ஙனம் எங்குநிறைந்தகடவுள், மனம் ஒன்றிலேயே இருக்கின்றானென்றும், மற்றஇடங்களிலில்லையென்றும், சொல்லுதல்கூடாமை. இதைநோக்கியே, "அங்கிங்கெனாதபடி யெங்கும்பிரகாசமாய்" எனவும், "பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற" எனவும், "கல்விலும் செம்பிலுமோ விருப்பானெங்கள் கண்ணுதலே" எனவும் ஆன்றோர் கூறினார். ஆகையால் எங்குமுள்ள கடவுளைக் * கல்லிலில்லையென்றுசொன்னால் பூரணத்துவங் குறையும். அதுகுறைந்தபோது, ரூபகற்பிதமுண்டாகும்; அது உண்டானபோது, கடவுள்என்பதுபோய், எல்லாம் நாமேயாய், அகங்காரவாதமுண்டாய்ப் பிறவிப்பெருங்கடலில் வீழ்ந்து கரையேறக்கூடாமல் அலைந்தலைந்து தவிக்கச்சந்தேகமேயில்லை, ஆகையால், கிரியையாகிய சிலாரூபவணக்கமும், பூரணத்தை நோக்குவதாகிய ஞானமும் கலந்துநிற்றலால், இச்செய்யுளின்கருத்து, கிரியையில் ஞானமேயாகச்சாதிக்கப்படும்.

இவ்வாறு, சொன்னமையால் உண்டானகருத்தென்னவெனின், இந்நூலாசிரியர், பாரமார்த்திகத்தைப்பற்றிச்சொன்னமையால் குற்றமன்றென்றும், வியவகாரத்தார் இவ்விஷயத்தையேகொண்டபோது,பூரணத்துவத்தை நோக்கிநடக்கவேண்டுமென்றும், கல்வியறிவில்லாத சிறியேன் சிற்றறிவிற்கெட்டினவரை யெழுதினதற்குப் பயன்யாதெனில், இதைப்பார்த்துக் கற்றோரும், மற்றோரும், நகைத்தல் ஒன்றுமேஎன்க. இன்னும்விரிக்கின்நன்றாய்விளங்கும்,ஆயின்,பெருகுமென்று விடுத்தாம். இவ்வாறே மற்றுமுள்ளவைக்கும் உரை யெழுதினால் மிகவும்பெருகுமென்று விடப்பட்டது. இங்ஙனம்;

மா - வ.

---

* கல்விலுமிருந்தார் என்பதற்குப்பிரகலாதாழ்வானும், மார்க்கண்டேயருமே, சான்றாம்.

உ

சிவமயம்.

# சிவவாக்கியர்பாடல்.

## காப்பு.

அரியதோர் நமச்சிவாய மாதியந்த மானதும்
ஆறிரண்டு நூறுதேவ ரன்றுரைத்த மந்திரம்
சரியதோ ரெழுத்தையுன்னி சொல்லுவேன் சிவாக்கியம்
தோஷதோஷ பாவமாய்கை தூரதூரவோடவே. 1

கரியதோர் முகத்தையொத்தகற்பகத்தைக்கைதொழக
கலைகள் நூல்கள் ஞானமுங் கருத்தில்வந் துதிக்கவே
பெரியபேர்கள் சிறியபேர்கள் கற்றுணர்ந்தபேரெலாம
பேயனாகி யோதிடும் பிழைபொறுக்க வேண்டுமே 2

## அக்ஷர நிலை.

ஆனவஞ் செழுத்துளே யண்டமு மகண்டமும்
ஆனவஞ் செழுத்துளே யாதியான மூவரும்
ஆனவஞ் செழுத்துளே யகாரமு மகாரமும்
ஆனவஞ் செழுத்துளே யடங்கலாவ லுற்றதே. 3

## சரியைவிலக்கல்.

ஓடியோடி யோடியோடி யுட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களுங் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி யெண்ணிறந்த கோடியே.

## யோகநிலை.

உருத்தரித்த நாடியி லொடுங்குகின்ற வாயுவை
கருத்தினா லிருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்

விருத்தரும் பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்
அருட்டரித்த நாதர்பாத மம்மைபாத முண்மையே. 5

## வேதநிலை.

வடிவுகண்டு கொண்டபெண்ணை மற்றொருவ னத்திடில்
விடுவனோ வவனையின்னம் வெட்டவேணு மென்பனே
நடுவன்வந் தழைத்தபோது நாறுமிந்த நல்லுடல்
சுடலைமட்டும் கொண்டுபோய்த் தோட்டிகைக் கொடுப்பரே.

## ஞானநிலை.

என்னிலே யிருந்ததொன்றை யானறிந்த தில்லையே
என்னிலேயிருந்ததொன்றை யானறிந்துகொண்டபின்
என்னிலே யிருந்ததொன்றை யாவர்காண வல்லிரோ
என்னிலே யிருந்திருந்து யானுணர்ந்துகொண்டனே.

நினைப்பதொன்று கண்டிலே னீயலாது வேறிலை
நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாய்கை மாய்கையை
அனைத்துமா யகண்டமா யனாதிமுன் னனாதியாய்
எனக்குள்நீ யுனக்குள்நா னிருக்குமாற தெங்ஙனே. 8

மண்ணும்நீ விண்ணும்நீ மறுகடல்க ளேழும்நீ
எண்ணும்நீ எழுத்தும்நீ யிசைந்தபண்ணெழுத்தும்நீ
கண்ணும்நீ மணியும்நீ கண்ணுளாடும் பாவைநீ
நண்ணுநீர்மை நின்றபாதம் நண்ணுமா றருளிடாய். 9

அரியுமல்ல வயனுமல்ல வப்புறத்தி லப்புறம்
கருமைசெம்மை வெண்மையைக் கடந்துநின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பற்றுமின்கள் பற்றுமின்கள்
துரியமுங் கடந்துநின்ற தூரதூர தூரமே. 10

அந்திகால முச்சிமூன்று மாடுகின்ற தீர்த்தமும்
சந்திதர்ப் பணங்களுந் தபங்களுஞ் செபங்களும்
சிந்தைமேவு ஞானமுந் தினஞ்செபிக்கு மந்திரம்
எந்தைராம ராமராம ராமவென்னு நாமமே. 11

கதாவுபஞ்ச பாதகங்க ளைத்துரந்த மந்திரம்
இதாமிதாம தல்லவென்று வைத்துழலு மேழைகாள்

சதுர்விடாம லோதுவார் தமக்குநல்ல மந்திரம்
இதாமிதாம ராமராம ராமவென்னும் நாமமே. 12

நாளதேது நீயதேது நடுவினின்ற தேதடா
கோணதேது குருவதேது கூறிடுங்கு லாமரே
ஆணதேது வழிவதேது வப்புறத்தி லப்புறம்
ஈணதேது ராமராம ராமவென்ற நாமமே 13

### யோகநிலை.

சாத்திரங்க ளோதுகின்ற சட்டநாத பட்டரே
வேத்திரைப்பு வந்தபோது வேதம்வந் துதவுமோ
மாத்திரைப்போ தும்முளே மறித்துநோக்க வல்லிரேல்
சாத்திரப்பை நோய்களேது சத்திமுத்தி சித்தியே.

### ஞானநிலை.

தூரந்தூரந் தூரமென்று சொல்லுவார்கள் சோம்பர்கள்
பாரும்விண்ணு மெங்குமாய் பரந்தவிப்ப ராபரம்
ஊருநாடு காடுதேடி யுழன்றுதேடு மூமைகாள்
நேரதாக வும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே. 15

### யோகநிலை.

நாலுவேத மோதுவீர் ஞானபாத மறிகிலீர்
பாலுநெய்க லந்தவாறு பாவிகா ளறிகிலீர்
ஆலமுண்ட கண்டனு ரகத்துளே யிருக்கவே
காலனென்று சொல்லுவீர் கனவிலும்ம இல்லையே. 16

வித்திலாத சம்பிரதாய மேலுமில்லை கீழுமில்லை
தச்சிலாத மாளிகை சமைந்தவாறு தெங்ஙனே
பெற்றதாயைவிற்றடிமை கொள்ளுகின்ற பேதைகாள்
சித்திலாத போதுசீவ னில்லையில்லை யில்லையே. 17

அஞ்சுமூனு மெட்டதா யநாதியான மந்திரம்
நெஞ்சிலே நினைந்துகொண்டு நாமுருச் செபிப்பிரேல்
பஞ்சமான பாதகங் னூறுகோடி செய்யினும்
பஞ்சுபோல் பறக்குமென்று நான்மறைகள் பன்னுமே

அண்டவாச லாயிரம்ப்ர சண்டவாச லாயிரம்
ஆறிரண்டு நூறுகோடி யானவாச லாயிரம்
இந்தவாச லேழைவாச லேகபோக மானவாசல்
எம்பிரா னிருக்கும்வாச லியாவர்காண வல்லரே. 19

சாமநாலு வேதமுஞ் சகலசாத் திரங்களும்
சேமமோக வோதிலுஞ் சிவனைநீ ரறிகிலீர்
காமநோயை விட்டுநீர் கருத்துளே யுணர்ந்தபின்
ஊனமற்ற காயமா யிருப்பனெங்க ளீசனே. 20

சங்கிரண்டு தாரையொன்று சன்னபின்ன லாகையால்
மங்கிமாளு தேயுலகில் மாணிடங்க ளெத்தனை
சங்கிரண்டை யுந்தவிர்ந்து தாரையூத வல்லிரேல்
கொங்கைமங்கை பங்கரோடு கூடிவாழ லாகுமே. 21

## ஞானநிலை.

தங்கமொன்று ரூபம்வேறு தன்மையான வாறுபோல்
செங்கண்மாலு மீசனுஞ் சிறந்திருந்த தெம்முளே
விங்களங்கள் பேசுவார் விளங்குகின்ற மாந்தரே
எங்குமாகி நின்றநாமம் நாமமிந்த நாமமே. 22

## யோகநிலை.

அஞ்செழுத்தி லேபிறந்து அஞ்செழுத்தி லேவளர்ந்து
அஞ்செழுத்தை யோதுகின்ற பஞ்சபூத பாவிகாள்
அஞ்செழுத்தி லோரெழுத் தறிந்துகூற வல்லிரேல்
அஞ்சலஞ்ச லென்றுநாத னம்பலத்தி லாடுமே. 23

அஞ்சுமஞ்சு மஞ்சுமே யனாதியான தஞ்சுமே
பிஞ்சுபிஞ்சு தல்லவோ பித்தர்காள் பிதற்றுறீர்
நெஞ்சிலஞ்சு கொண்டுநீர் நின்றுதொக்க வல்லிரேல்
அஞ்சுமில்லை யாறுமில் லனாதியான தொன்றுமே 24

நீளவீடு கட்டுறீர் நெடுங்கதவு சாத்துறீர்
வாழவேணு மென்றலோ மகிழ்ந்திருந்த மாந்தரே
காலனோலை வந்தபோது கைகலந்து நின்றிடும்
ஆலமுண்ட கண்டர்பாத மம்மைபாத முண்மையே.

### கிரியைநிலை.

வீடெடுத்து வேள்விசெய்து மெய்யரோடு பொய்யுமாய்
மாடுமக்கள் பெண்டிர்சுற்ற மென்றிருக்கு மாந்தர்காள்
நாடுபெற்ற நடுவர்கையி லோலைவந் தழைத்திடில்
ஓடுபெற்ற தவ்விலை பொறாதுகாணு முடலமே. 26

### யோகநிலை.

ஓடமுள்ள போதெலா மோடியே யுலாவலாம்
ஓடமுள்ள போதெலா முறுதிபண்ணிக் கொள்ளலாம்
ஓடமு முடைந்தபோது வொப்பிலாக வெளியிலே
ஆடுமில்லை கோலுமில்லை யாருமில்லை யானதே. 27

### உற்பத்திநிலை.

அண்ணலே யனாதியே யனாதிமுன் னனாதியே
பெண்ணு மாணு மொன்றலோ பிறப்பதற்கு முன்னெலாம்
கண்ணிலாணி சுக்கிலங் கருதியோங்கு நாளிலே
மண்ணுளோரும் விண்ணுளோரும் வந்தவாற தெங்ஙனே.23

### ஞானநிலை.

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்க ளெத்தனை
பாழிலே செபித்துவிட்ட மந்திரங்க ளெத்தனை
மிண்டராய்த் திரிந்தபோ திரைத்தநீர்க ளெத்தனை
மீளவுஞ் சிவாலயங்கள் சூழவந்த தெத்தனை
அண்டர்கோ னிருப்பிட மறிந்துணர்ந்த ஞானிகாள்
கண்டகோயில் தெய்வமென்று கையெடுப்ப தில்லையே.

### யோகநிலை.

நெருப்பைமூட்டி நெய்யைவிட்டு நித்தநித்த நீரிலே
விருப்பமோடு நீர்குளிக்கும் வேதவாக்யங் கேளுமின்
நெருப்புநீரு மும்முளே நினைந்துகூற வல்லிரேல்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்துகூட லாகுமே.30

பாட்டிலாத பரமனைப் பரமலோக நாதனை
நாட்டிலாத நாதனை நாரிபங்கர் பாகனை

கூட்டிமெள்ள வாய்புதைத்து குறுகுறுத்தமந்திரம்
வேட்டகாரர் குசுகுசுப்பை கூப்பிடா முகிஞ்சதே. 31

### தரிசனம்.

செய்யதெங்கி லேயிளநீர் சேர்ந்தகார ணங்கள்போல்
ஐயன்வந்து என்னுளம் புகுந்துகோயில்கொண்டனன்
ஐயன்வந்து என்னுளம் புகுந்துகோயில்கொண்டபின்
வையகத்தில் மாந்தர்முன்னம் வாய்திறப்ப தில்லையே.

### சரியைநிலை.

மாறபட்டு மணிதுலக்கி வண்டினெச்சில் கொண்டுபோய்
ஊறுபட்ட கல்லின்மீதே யூற்றுகின்ற மூடரே
மாறுபட்ட தேவரு மறிந்துநோக்கு மென்னையும்?
கூறுபட்டு தீர்க்கவோ குருக்கள்பாதம் வைத்ததே. 33

### யோகநிலை.

கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா
கோயிலுங் குளங்களுங் கும்பிடுங் குலாமரே
கோயிலு மனத்துளே குளங்களு மனத்துளே
ஆவது மழிவது மில்லையில்லை யில்லையே. 34

செங்கலுங் கருங்கலுஞ் சிவந்தசாதி லிங்கமும்
செம்பிலே திராவிலுஞ் சிவனிருப்ப னென்கிறீர்
உனபத மறிந்துநீ ரும்மைநீ ரறிந்தபின்
அம்பலம் நிறைந்தநாத ராடல்பாட லாகுமே. 35

### கிரியைநிலை.

பூசைபூசை யென்றுநீர் பூசைசெய்யும் பேதைகாள்
பூசையுன்ன தன்னிலே பூசைகொண்ட தெவ்விடம்
ஆதிபூசை கொண்டதோ வநாதிபூசை கொண்டதோ
ஏதுபூசை கொண்டதோ வின்னதென் றியம்புமே. 36

### ஞானநிலை.

இருக்குநாலு வேதமு மெழுத்தையற வோதிலும்
பெருக்கநீறு பூசிலும் பிதற்றிலும் பிரானிரான்

உருக்கிநெஞ்சை யுட்கலந்து வுண்மைகூற வல்லிரேல்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்துகூட லாகுமே.

### யோகநிலை.

கலத்தின்வார்த்து வைத்தநீர் கடுத்ததீ முடுக்கினால்
கலத்திலே கரந்ததோ கடுத்ததீ குடிக்கதோ
நிலத்திலே கரந்ததோ நீள்விசும்பு கொண்டதோ
மனத்தின்மாயை நீக்கிலே மனத்துளே கரந்ததே. 38

### சரியைநிலை.

பறைச்சியாவ தேதடா பணத்தியாவ தேதடா
இறைச்சிதோ லெலும்பினு மிலக்கமிட் டிருக்குதோ
பறைச்சிபோகம் வேறதோ பணத்திபோகம் வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பகுத்துபாரு மும்முளே. 39

வாயிலே குடித்தநீரை யெச்சிலென்று சொல்லுநீர்
வாயிலேகு தப்புவேதம் மெனப்படக் கடவதோ
வாயிலெச்சில் போகவென்று நீர்தனைக் குடிப்பீர்காள்
வாயிலெச்சில் போனவண்ணம் வந்திருந்து சொல்லுமே. 40

ஓதுகின்ற வேதமெச்சி லுள்ளமந்தி ரங்களெச்சில்
போதகங்க ளானதெச்சில் பூதலங்க ளேழுமெச்சில்
மாதிருந்த விந்துவெச்சில் மதியுமெச்சி லொளியுமெச்சில்
எதிலெச்சி லில்லதில்லை யில்லையில்லை யில்லையே. 41

### உற்பத்தி.

பிறப்பதற்கு முன்னெலா மிருக்குமாற தெங்ஙனே
பிறந்துமண் ணிறந்துபோ யிருக்குமாற தெங்ஙனே
குறித்துநீர் சொலாவிடிற் குறிப்பிலாத மாந்தரே
அறுப்பனே செவியிரண்டு மஞ்செழுத்து வாளினால்.

### ஞானம்.

அம்பலத்தை யம்புகொண் டசங்கென்றா லசங்குமோ
கம்பமற்ற பாற்கடல் கலங்கென்றால் கலங்குமோ

இன்பமற்ற யோகியை யிருளும்வந் தணுகுமோ
செம்பொனம் பலத்துளே தெளிந்ததே சிவாயமே. 43

கடவுள்நிலை.

சித்தமேது சிந்தையேது சீவனேது சித்தரே
சத்தியேது சம்புவேது சாதிபேத மற்றது
முத்தியேது மூலமேது மூலமந்தி ரங்களேது
வித்திலாத வித்திலே யின்னதென் றியம்புமே. 44

ஒடுக்கநிலை.

சித்தமற்று சிந்தையற்று சீவனற்று நின்றிடம்
சத்தியற்று சம்புவற்று சாதிபேத மற்றுநன்
முத்தியற்று மூலமற்று மூலமந்தி ரங்களும்
வித்தைவித்தை யீன்றவித்தில் விளைந்ததே சிவாயமே

கிரியை.

சாதியாவ தேதடா சலந்திரண்ட நீரெலாம்
பூதவாச லொன்றலோ பூதமைந்து மொன்றலோ
காதில்வாளி காரைகம்பி பாடகம்பொ னொன்றலோ
சாதிபேத மோதுகின்ற தன்மையென்ன தன்மையே.

கறந்தபால் முலைப்புகா கடைந்தவெண்ணை மோர்புகா
உடைந்துபோன சங்கினோசை யுயிர்களு முடற்புகா
விரிந்தபூ வுதிர்ந்தகாயு மீண்டுபோய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை யில்லையில்லை யில்லையே. 47

தரையினிற் கிடந்தபோ தன்றுதூமை யென்றிலீர்
துறையறிந்து நீர்குளித்த தன்றுதூமை யென்றிலீர்
பறையறைந்து நீர்பிறந்த தன்றுதூமை யென்றிலீர்
புரையிலாத வீசரோடு பொருந்துமாற தெங்ஙனே. 48

தூமைதூமை யென்றுநீர் துவண்டலையு மேழைகாள்
தூமையான பெண்ணிருக்க தூமைபோன தெவ்விடம்
ஆமைபோல முழுகிவந் தனேகவேத மோதுறீர்
தூமையுந் திரண்டுருண்டு சொற்குருக்க ளானதே. 46

சொற்குருக்க ளானதுஞ் சோதிமேனி யானதும்
மெய்க்குருக்க ளாயினும் வேணபூசை செய்கினும்
சற்குருக்க ளாயினுஞ் சாத்திரங்கள் சொல்லினும்
மெய்க்குருக்க ளாயினுந் திரண்டுருண்ட தாமைமே.

சைவ்வடக்கள் கொண்டுநீர் கண்சிமிட்டி நிற்கிறீர்
எவ்விடங்கள் கண்டுநீ ரெண்ணியெண்ணி பார்க்கிறீர்
பொய்யுணர்ந்த சிந்தையைப் பொருந்திநோக்க வல்லிரேல்
மெய்கடிந்த தும்முளே விளைந்துகூற லாகுமே. 51

ஆடுகாட்டி வேங்கையை யகப்படுத்து மாறுபோல்
மாடுகாட்டி யென்னைநீ மதிமயக்க லாகுமோ
கோடுகாட்டி யானையைக் கொன்றுரித்த கொற்றவா
வீடுகாட்டி யென்னைநீ வெளிப்படுத்த வேணுமே. 52

இடதுகண்கள் சந்திரன் வலதுகண்கள் சூரியன்
இடக்கைசங்கு சக்கரம் வலக்கைசூல மான்மழு
எடுத்தபாதம் நீண்முடி யெண்டிசைக்கு மப்புறம்
உடல்கலந்து நின்றமாயம் யாவர்காண வல்லரே. 53

நாழியுப்பு நாழியப்பு நாழியான வாறுபோல்
ஆழியோனு மீசனு மமர்ந்துவாழ்ந் திருந்திடம்
எருதிலேறு மீசனு மியங்குசக்ர தரனையும்
வேறுகூறு பேசுவார் வீழ்வர்வீ ணரகிலே. 54

தில்லைநா யகனவன் திருவரங் கனுமவன்
எல்லையான புவனமு மேகமுத்தி யானவன்
பல்லுநாவு முள்ளபேர் பகுந்துகூறி மகிழுவார்
வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து மாய்வரே. 55

எத்திசைக்கு மெவ்வுயிர்க்கு மெங்களப்ப னெம்பிரான்
முத்தியான வித்துளே முளைத்தெழுந்த வச்சுடர்
சித்தமுந் தெளிந்துவேத கோயிலுந் திறந்தபின்
அத்தனாடல் கண்டபின் னடங்கலாடல் காணுமே. 56

உற்றநூல்க ளும்முளே யுணர்ந்துணர்ந்து பாடுவீர்
பற்றறுத்து நின்றுநீர் பராபரங்க ளெய்திலீர்
செற்றமாவை யுள்ளரைச் செருக்கறுத் திருத்திடில்
சுற்றமாக வும்முளே சோதியென்றும் வாழுமே. 57

போதடா வெழுந்ததும் புனலதாகி வந்ததும்
தாதடா புகுந்ததும் தானடா விளைந்ததும்
ஓதடா வஞ்சுமூன்று மொன்றதான வக்கரம்
ஓதடா விராமராம ராமமென்னு நாமமே. 58

அகாரமென்ற வக்கரத்து ளவ்வுவந் துதித்ததோ
உகாரமென்ற வக்கரத்தி லுவ்வுவந் துதித்ததோ
அகாரமும் உகாரமுஞ் சிகாரமன்றி நின்றதோ
விகாரமற்ற யோகிகள விரித்துரைக்க வேணுமே. 59

அறத்திறங்க ளுக்குநீ யகண்டமெண் டிசைக்குநீ
திறத்திறங்க ளுக்குநீ தேடுவார்கள் சிந்தைநீ
உறக்கம்நீ யுணர்வுநீ யுட்கலந்த சோதிநீ
மறக்கொணாத நின்கழல் மறப்பினுங் குடிகொளே. 60

அண்டம்நீ யகண்டம்நீ யாதிமூல மானநீ
கண்டம்நீ கருத்துநீ காவியங்க ளானநீ
புண்டரீக மற்றுளே புணருகின்ற புண்ணியர்
கொண்டகோல மானநேர்மை கூர்மையென்ன கூர்மையே.

மையடர்ந்த கண்ணினார் மயக்கிடும் மயக்கிலே
மையிறந்து கொண்டுநீங்க ளல்லலற் றிருப்பிர்காள்
மெய்யடர்ந்த சிந்தையால் விளங்குஞான மெய்தினால்
உய்யடர்ந்து கொண்டுநீங்க ளூழிகால மாழ்விரே. 62

கருவிருந்த வாசலாற் கலங்குகின்ற வூமைகாள்
குருவிருந்து சொன்னவார்த்தை குறித்துநோக்க வல்லிரேல்
உருவிலங்கு மேனியாகி யும்பராகி நின்றநீர்
திருவிலங்கு மேனியாகச் சென்றுகூட லாகுமே. 63

தீர்த்தமாட வேணுமென்று தேடுகின்ற தீனர்காள்
தீர்த்தமாட லெவ்விடந் தெளிந்துநீ ரியம்பிலீர்

தீர்த்தமாக வும்முளே தெளிந்துநீ ரிருந்தபின்
தீர்த்தமாக வுள்ளதுஞ் சிவாயவஞ் செழுத்துமே. 64

கழுத்தையும் நிமிர்த்திநல்ல கண்ணையும் விழித்துநீர்
பழுத்துவாய் விழுந்துபோன பாவமென்ன பாவமே
அழுத்தமான வித்திலே யனாதியா யிருப்பதோர்
எழுத்திலோ வெழுத்திலே யிருக்கலா மிருத்துமே. 65

கண்டுநின்ற மாயையுங் கலந்துநின்ற பூதமும்
உண்டுறங்கு மாறுநீ ருணர்ந்திருக்க வல்லிரேல்
பண்டையாறு மொன்றுமாய்ப் பயந்தவேத சுத்தனாய்
அண்டமுத்தி யாகிநின்ற வாதிமூல மூலமே. 66

ஈன்றவாச லுக்கிரங்கி யெண்ணிறந்து போவீர்காள்
கான்றவாழை மொட்டலர்ந்த காரண மறிகிலீர்
சான்றவாச லைத்திறந்து நாடிநோக்க வல்லிரேல்
தோன்றுமாயை விட்டொழிந்து சோதிவந்து தோன்றுமே.

உழலும்வாச லுக்கிரங்கி யூசலாடு மூமைகாள்
உழலும்வாச லைத்திறந்து வுண்மைசேர வெண்ணிலீர்,
உழலும்வாச லைத்திறந்து வுண்மைநீ ருணர்ந்தபின்
உழலும்வாச லுள்ளிருந்த வுண்மைதா னுமாவிரோ. 68

மூலநாடி தன்னிலே முளைத்தெழுந்த சோதியை
நாடிநாடி யும்முளே நாழிகை யிருந்தபின்
பாலனாகி வாழலாம் பறந்துபோக யாக்கையும்
ஆலமுண்ட கண்டரானை யம்மையானை யுண்மையே.

இருக்கவேணு மென்றபோ திருக்கலா யிருக்குமோ
மரிக்கவேணு மென்றலோ மண்ணுளே படைத்தனர்
சுருக்கமற்ற தம்பிரான் சொன்னவஞ் செழுத்தையும்
மரிக்குமுன் வணங்கிடீர் மருந்தெனப் பதங்கெடீர்.

அம்பத்தொன்றி லக்கர மடங்கலோ வொழுத்துமோ
விண்பரந்த மந்திரம் வேதநான்கு மொன்றலோ
விண்பரந்த மூலவஞ் செழுத்துளே முளைத்ததே
அங்கலிங்க பீடமா யமர்ந்ததே சிவாயமே. 71

சிவாயவென்ற வக்ஷரஞ் சிவனிருக்கு மக்ஷரம்
உபாயமென்று நம்புதற்கு உண்மையான வக்ஷரம்
கபாடமற்ற வாசலைக் கடந்துபோன வாயுவை
உபாயமிட் டழைக்குமே சிவாயவஞ் செழுத்துமே 72

உருவுமல்ல வெளியுமல்ல வொன்றைமேவி நின்றதல்ல
மருவுவாசல் சொந்தமல்ல மற்றதல்ல வற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசலான தானுமல்ல
உரியதாகி நின்றநேர்மை யாவர்காண வல்லரே. 73

ஆத்துமா வநாதியோ வாத்துமா வநாதியோ
பூத்திருந்த ஐம்பொறி புலன்களு மநாதியோ
தாக்கமிக்க நூல்களுஞ் சதாசிவ மநாதியோ
வீக்கவந்த யோகிகாள் விரித்துரைக்க வேணுமே. 74

அறிவிலே பிறந்திருந் தாகமங்க ளோதுநீர்
நெறியிலே மயங்குகின்ற நேர்மையொன் றறிகிலீர்
உறியிலே தயிரிருக்க வூர்புகுந்து வெண்ணெய்தேடும்
அறிவிலாத மாந்தரோ டணுகுமாற தெங்ஙனே. 75

இருவரங்க மும்பொருந்தி யென்புருகி நோக்கிலீர்
உருவரங்க மாகிநின்ற வுண்மையொன்றை யோர்கிலீர்
கருவரங்க மாகிநின்ற கற்பனை கடந்துபின்
திருவரங்க மென்றுநீர் தெளிந்திருக்க வல்லிரே. 76

கருக்குழியி லாசையாய்க் காதலுற்று நிற்கிறீர்
குருக்கிடுக்கு மேழைகாள் குலாவுகின்ற பாவிகாள்
திருத்திருத்தி மெய்யினுஞ் சிவந்தவஞ் செழுத்தையும்
உருக்கழிக்கு மும்மையு முணர்ந்துணர்ந்து கொள்ளுமே

மண்ணிலே பிறக்கவும் வழக்கலா துரைக்கவும்
எண்ணிலாத கோடிதேவ ரென்னதுன்ன தென்னவும்
கண்ணிலே மணியிருக்கக் கண்மறைந்த வாறுபோல்
எண்ணில்கோடி தேவரு மிதன்கணால் விழிப்பதே.

மண்கலங் கவர்ந்தபோது வைத்துவைத் தடுக்குவார்
வெங்கலங் கவர்ந்தபோது வேணுமென்று பேணுவார்

நக்கலங் கவர்ந்தபோது நாறுமென்று போடுவார்
எண்கலந்து நின்றமாய மென்னமாய மீசனே. 79

மிக்கசெல்வ நீபடைத்த விறகுமேவிப் பாவிகாள்
விறகுடன் கொளுத்திமேனி வெந்துபோவ தறிகிலீர்
மக்கள்பெண்டிர் சுற்றமென்று மாயைகாணு மிவையெலாம்
மறலிவந் தழைத்தபோது வந்துகூட லாகுமோ. 80

ஒக்கவந்து மாதுடன் செறிந்திடத்தி லழகியே
ஒருவராகி யிருவராகி யிளமைபெற்ற வூரிலே
அக்கணிந்து கொன்றைசூடி யம்பலத்தி லாடுவார்
அஞ்செழுத்தை யோதிட னனேகபாவ மகலுமே. 81

மாடுகன்று செல்வமு மனைவிமைந்தர் மகிழவே
மாடமாளி கைப்புறத்தில் வாழுகின்ற நாளிலே
ஓடிவந்து காலதூதர் சடுதியாக மோதவே
உடல்கிடந் துயிர்கழன்ற வுண்மைகண்டு முணர்கிலீர்

பாடுகின்ற துப்பருக்கள் தங்களுக் களுக்கியே
பழுதிலாத கன்மகூட்ட மிட்டவெங்கள் பரமனே
நீதிசெம்பொ னம்பலத்து ளாடுகொண்ட வப்பனே
நீலகண்ட காளகண்ட நித்யகல்வி யாணனே. 83

கானமற்ற காட்டகத்தில் வெந்தெழுந்த நீறுபோல்
ஞானமுற்ற நெஞ்சகத்தில் வல்லதேது மில்லையே
ஊனமற்ற சோதியோ டுணர்வுசேர்ந் தடக்கினால்
தேனகத்தி னூறல்போல் தெளிந்ததே சிவாயமே. 84

பருகியோடி யும்முளே பறந்துவந்த வெளிதனை
நிரவியே நினைந்துபார்க்கில் நின்மலம தாகுமே
உருகியோடி யெங்குமாய மாயசோதி தன்னுளே
கருதடா வுனக்குநல்ல காரணம தாகுமே. 85

சோதிபாதி யாகிநின்ற சுத்தமும் பலித்துவந்து
போதியாத போதகத்தை யோதுகின்ற பூரணா

விதியாக வோடிவந்து விண்ணடியி னூடுபோய்
ஆதிநாத னாகனென் றனந்தகால முள்ளதே. 86

இறைவனா லெடுத்தமாடத் தில்லையம் பலத்திலே
அறிவினா லடுத்தகாய மஞ்சினா லமைந்ததே
கருவினாத முண்டுபோய் கழன்றவாச லொன்பதும்
ஒருவரா யொருவர்கோடி யுள்ளுளே யமர்ந்ததே. 87

நெஞ்சிலே யிருந்திருந்து நெருக்கியோடும் வாயுவை
அன்பினா லிருந்துநீ ரருகிருத்த வல்லிரேல்
அன்பர்கோயில் காணலா மகன்றுமெண்டிசைக்குளே
தம்பிபோடி யோடியோ சொல்லடா சுவாமியே. 88

தில்லையை வணங்கிநின்று தெண்டனிட்ட வாயுவை
எல்லையைக் கடந்துநின்று ஏகபோக மாய்கையோ
வெல்லையைக்கடந்துநின்று சொர்க்கலோகவெளியிலே
வெள்ளையுஞ் சிவப்புமாகி மெய்கலந்து நின்றதே. 89

உடம்புயி ரெடுத்ததோ வுயிருடம் பெடுத்ததோ
உடம்புயி ரெடுத்தபோ துருவமேது செப்புவீர்
உடம்புயி ரிறந்துபோ யுயிரிருப்ப தில்லையே
உடம்புமெய் மறந்துகண் டுணர்ந்துஞான மோதுமே.

அவ்வெனு மெழுத்தினா லகண்டமேழு மாகினாய்
உவ்வெனு மெழுத்தினா லுருத்தரித்து நின்றனை
மவ்வெனு மெழுத்தினால் மயங்கினார்கள் வையகம்
அவ்வுமுவ்வும் மவ்வுமா யமர்ந்ததே சிவாயமே. 91

மந்திரங்க ளுண்டுநீர் மயங்குகின்ற மானிடர்
மந்திரங்க ளாவது மரத்திலூற லன்றுகாண்
மந்திரங்க ளாவது மதத்தெழுந்த வாயுவை
மந்திரத்தை யுண்டவர்க்கு மானமேது மில்லையே. 92

என்னவென்று சொல்லுவே னிலக்கணமி லாததைப்
பன்னுகின்ற செந்தமிழ்ப் பதங்கடந்த பண்பினை
மின்னகத்தில் மின்னொடுங்கி மின்னதான வாறுபோல்
என்னகத்து ளீசனும் யானுமல்ல தில்லையே. 93

ஆலவித்தி லாலொடுங்கி யாலமான வாறுபோல்
வேறுவித்து மின்றியே விளைந்துபோக மெய்திடீர்
ஆறுவித்தை யோர்கிலீ ரறிவிலாத மாந்தரே
பாருமித்தை யும்முளே பரப்பிரம மானதே. 94

அவ்வுதித்த மந்திர மகாரமாய் உகாரமாய்
எவ்வெழுத் தறிந்தவர்க் கெழுபிறப்ப திங்கிலை
சவ்வுதித்த மந்திரத்தைத் தற்பரத் திருத்தினால்
அவ்வுமுவ்வு மவ்வுமா யமர்ந்ததே சிவாயமே. 95

நவ்விரண்டு காலதாய் நவின்றமவ் வயிறதாய்
சிவ்விரண்டு தோளதாய் சிறந்தவவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதா யெழுந்துநின்ற நேர்மையிற்
செவ்வையொத்து நின்றதே சிவாயமஞ் செழுத்துமே

இரண்டுமொன்று மூலமா யியங்குசக் கரத்துளே
சுருண்டுமூன்று வளையமாய்ச் சுணங்குபோற்கிடந்ததீ
முரண்டெழுந்த சங்கினோசை மூலநாடி யூடுபோய்
அரங்கன்பட் டணத்திலே யமர்ந்ததே சிவாயமே. 97

கடலிலே திரியுமாமை கரையிலேறி முட்டையிட்டுக்
கடலிலே திரிந்தபோது ரூபமான வாறுபோல்
மடலுளே யிருக்குமெங்கள் மணியரங்க சோதியை
உடலுளே நினைந்துநல்ல வுண்மையானவுண்மையே.

மூன்றுமண் டலத்தினு முட்டிநின்ற தூணிலும்
நான்ற பாம்பின் வாயிலும் நவின்றெழுந்த வட்சரம்
ஈன்றதாயுமப்பரு மெடுத்துரைத்த மந்திரம்
தோன்றுமோரெழுத்துளே சொல்லவெங்குதில்லையே.

மூன்றுமூன்று மூன்றுமே மூவர்தேவர் தேடியும்
மூன்றுமஞ் செழுத்துமாய் முழங்குமவ்வெழுத்துளே
ஈன்றதாயு மப்பரு மியங்குகின்ற நாதமும்
தோன்றுமண் டலத்திலே சொல்லவெங்கு தில்லையே.

சோறுகின்ற பூதம்போற் சுணங்குபோற் கிடந்தநீ
நாறுகின்ற கும்பியி ளவின்றெழுந்த மூடரே

சீறுகின்ற ஐவரைச் சிறுக்கறுக்க வல்லிராட்
ஆறுகோடி வேணியா ராறிலொன்றி லாவரே. 101

வட்டமென்று வும்முளே மயங்கிவிட்ட திவ்வெளி
அட்டரக் கரத்துளே யடக்கமு மொடுக்கமும்
எட்டுமெட்டு மெட்டுமா மியங்குசக்க ரத்துளே
எட்டலாமு தித்ததெம்பி ரானைநா னறிந்தபின். 102

பேசுவானு மீசனே பிரமஞான மும்முளே
ஆசையான ஐவரு மலைந்தலைகள் செய்கிறார்
ஆசையான ஐவரை யடக்கியோ ரெழுத்திலே
பேசிடா திருப்பிரேல் நாதம்வந் தொலிக்குமே. 103

நமசிவாய வஞ்செழுத்தும் நிற்குமே நிலைகளும்
நமசிவாய மஞ்சுமஞ்சும் புராணமான மாய்கையை
நமசிவாய மஞ்செழுத்தும் நம்முளே யிருக்கவே
நமசிவாய வுண்மையை நற்குரைசெய் நாதனே. 104

பரமுனக் கெனக்குவேறு பயமிலை பராபரா
கரமெடுத்து நிற்றலும் குவித்திடக் கடப்படா
சிரமுருகி யமுதளித்த சீருலாவு நாதனே
வரமெனக்கு நீயளித்த ஓம்நமசி வாயமே. 105

பச்சைமண் பதுப்பிலே பழுப்பதிந்த வேட்டுவன்
நித்தமும் நினைந்திட நினைந்தவண்ண மாயிடும்
பச்சைமண் ணிடிந்துபோய் பறந்ததும்பி யாயிடும்
பித்தர்கா ளறிந்துகொள் பிரானிருந்த கோலமே. 106

ஒளியதான காசிமீது வந்துதங்கு வோர்க்கெலாம்
வெளியதான சோதிமேனி விசுவநாத னானவன்
தெளியுமங்கை யுடனிருந்து செப்புகின்ற தாரகம்
வெளியசோரி ராமராம ராமமிந்த நாமமே. 107

விழியினோடு புனல்விளைந்த வில்லவல்லி யோனியும்
வெளியிலே பிதற்றலாம் விளைவுநின்ற தில்லையே
வெளிபரந்த தேசமும் வெளிக்குள்மூல வித்தையும்
தெளியும்வல்ல ஞானிகள் தெளிந்திருத்தல் திண்ணமே. 108

ஓம்நமசி வாயமே யுணர்ந்துமெய் யுணர்ந்துபின்
ஓம்நமசி வாயமே யுணர்ந்துமெய் தெளிந்தபின்
ஓம்நமசி வாயமே யுணர்ந்துமெய் யுணர்ந்தபின்
ஓம்நமசி வாயமே யுட்கலந்து நிற்குமே. 109

அல்லல்வாச லொன்பது மறுத்தடைந்த வாசலும்
சொல்லும்வாச லோரைந்து சொம்மிவிம்மி நின்றது
நல்லவாச லைத்திறந்து ஞானவாச லூடுபோய்
எல்லைவாசல் கண்டவ ரினிப்பிறப்ப தில்லையே. 110

ஆதியான தொன்றுமே யனேகனேக ரூபமாய்
சாதிபேத மாயெழுந்து சர்வசீவ னானபின்
ஆவியோடு ஆடுகின்ற மீண்டுமிந்த சென்மமாம்
சோதியான ஞானியர்க்குஞ் சுத்தமா யிருப்பரே. 111

மலர்ந்ததாது மூலமாய் வையக மலர்ந்ததும்
மலர்ந்தபூ மயக்கம்வந் தடுத்ததும் விடுத்ததும்
புலன்களைந்தும் பொறிகலங்கி பூமிமேல் விழுந்ததும்
இனங்கலங்கி நின்றமாய மென்னமாய மீசனே. 112

பாரடங்க வுள்ளதும் பரந்தவான முள்ளதும்
ஓரிடமு மன்றியே யொன்றிநின்ற வொண்சுடர்
ஆரிடமு மன்றியே யகத்துளும் புறத்துளும்
சீரிடங்கள் கண்டவர் சிவன்தெரிந்த ஞானியே. 113

மண்கிடார மேசுமந்து மலையுளேறி மறுகுறீர்
எண்படாத காரியங்க ளியலுமென்று கூறுநீர்
தம்பிரானை நாள்கடோறுந் தரையிலே தலைபடக்
கும்பிடாத மாந்தரோடு கூடிவாழ்வ தெங்ஙனே. 114

நாவிநா லழிந்ததும் நலங்குல மழிந்ததும்
மேவுதே ரழிந்ததும் விசாரமுங் குறைந்ததும்
பாவிகாளி தென்னமாயம் வாமநாடு பூசலாய்
ஆவியா ரடங்கினா லைவரு மடங்குவார். 115

வீடெடுத்துவேள்விசெய்துமெய்யரோடுபொய்யுமாய்
மாடுமக்கள் பெண்டிர்சுற்ற மென்றிருக்கு மாந்தர்காள்

நாடுபெற்ற நண்பர்கையி லோலைவந் தழைத்தபோது
ஆடுபெற்ற தவ்விலை பெறாதுகாணு மிவ்வுடல். 116

இல்லைஇல்லை யென்றுநீ ரியம்புகின்ற வேழைகாள்
இல்லையென்று நின்றதொன்றை யில்லையென்ன லாகுமோ
இல்லையல்லவொன்றுமல்லவிரண்டுமொன்றி நின்றதை
எல்லைகண்டு கொண்டபே ரினிப்பிறப்ப தில்லையே.

காரகார காரகார காவலூழி காவலன்
போரபோர போரபோர போரில்நின்ற புண்ணியன்
மாரமார மாரமார மரங்களேழு மெய்தசீ
ராமராம ராமராம நாமமென்னு நாமமே; 118

நீடுபாரி லேபிறந்து நேயமான காயந்தான்
வீடுவேறிதென்றபோது வேண்டியின்பம்வேண்டுமோ
பாடிநாலு வேதமும் பாரிலே படர்ந்ததோ
ராமராம ராமராம நாமமென்னுநாமமே. 119

உயிருநன்மை யாலுட லெடுத்துவந் திருந்திடும்
உயிருடம் பொழிந்தபோது ரூபரூப மாயிடும்
உயிர்சிவத்தின்மாய்கையாகியொன்றையொன்றுகொன்றிடும்
உயிருசத்தி மாய்கையாகி யொன்றையொன்ற தின்னுமே.

நெட்டெழுத்து வட்டமோ நிறைந்தபல்லி யோனியும்
நெட்டெழுத்தில்வட்டமொன்றநின்றதொன்றுகண்டிலேன்
குட்டெழுத்தி லத்ததென்று கொம்புகால் குறித்திடி
னெட்டெழுத்தில் வட்டமொன்றில் நேர்படானம் மீசனே

விண்ணிலுள்ள தேவர்க ளறிபொணாதமெய்ப்பொருள்
கண்ணிலாணி யாகவே கலந்துநின்ற தெம்பிரான்
மண்ணிலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்தபின்
அண்ணலாரு மெம்முளே யமர்ந்துவாழ்வ துண்மையே. 122

விண்கடந்து நின்றசோதி மேலைவாசலைத் திறந்து
கண்களித்த வுள்ளுளே கலந்துபுக் கிருந்தபின்
மண்பிறந்த மாயமும் மயக்கமு மறந்துபோய்
எண்கலந்த வீசனோ டிசைந்திருப்ப துண்மையே. 123

மூலமான மூச்சதில் மூச்சறிந்து விட்டபின்
நாலுநாளு முன்னிலொரு நாட்டமாகி நாட்டிடில்
பாலனாகி நீடலாம் பரப்பிரம மாகலாம்
ஆலமுண்ட கண்டராணை யம்மைபாணை யுண்மையே.

மின்னெழுந்து மின்பரந்து மின்னொடுங்கும் வாறுபோல்
என்னுள்நின்ற வென்னுளீச னென்னுளே யடங்குமே
கண்ணுணின்ற கண்ணில்நேர்மை கண்ணறி விலாமையால்
என்னுணின்ற வென்னைநா னியானறிந்த தில்லையே,

இருக்கலா மிருக்கலா மவனிலே யிருக்கலாம்
அரிக்குமால் பிரமனு மகண்டமேழ கற்றலாம்
கருக்கொளாத குழியிலே காவிடாத கண்ணிலே
நெருப்பறை திறந்தபின்பு நீயும்நானு மீசனே. 126

ஏகபோக மாகிய விருவரு மொருவராய்
போகமும் புணர்ச்சியும் பொருந்துமாறதெங்ஙனே
ஆகிலு மழகிலு மதங்கணைய தானபின்
சாகிலும் பிறக்கிலு மில்லையில்லை யில்லையே. 127

வேதனாலு பூதமாய் விரவுமங்கி நீரதாய்
பாதமேயி லிங்கமாய்ப் பரிந்துபூசை பண்ணினால்
காதில்நின்று கடைதிறந்து கட்டறுத்த ஞானிகள்
ஆதியந்த முங்கடந் தரியவீட னாகுமே. 128

பருத்தினால் முரிக்கியிட்டு பஞ்சியோது மாந்தரே
துருத்தினால் முரிக்கியிட்டு துன்பநீங்க வல்லிரோல்
கருத்தினால் கலைப்படுங் காலநால் கழிந்திடும்
திருத்தினால் காவருஞ் சிவாயவஞ் செழுத்துமே. 129

சாவதான தத்துவச் சடங்குசெய்யு மூமைகாள்
தேவர்கல்லு மாவரோ சிரிப்பதன்றி யென்செய்வேன்
மூவராலு மறியொணாத முக்கணன் முதற்கொழுந்து
காவலாக வும்முளே கலந்திருப்பன் காணுமே. 130

காலைமாலை நீரிலே முழுகுமந்த மூடர்காள்
காலைமாலை நீரிலே கிடந்ததேரை யென்பெறும்

காலமே யெழுந்திருந்து கண்கள்மூன்றிலொன்றையும்
மூலமே நினைந்திராகில் முத்திசித்தி யாகுமே. 131

எங்கள்தேவ ருங்கள்தேவ ரொன்றிரண்டு தேவரோ
இங்குமங்கு மாயிரண்டு தேவரோ யிருப்பரோ
அங்குமிங்கு மாகிநின்ற வாதிமூர்த்தி யொன்றலோ
வங்கவாரஞ் சொன்னபேர்கள் வாய்புழுத்துமாள்வரே.

இறையறை யிடைக்கிட வன்றுதூமை யென்கிறீர்
முறையறிந்து பிறந்தபோது மன்றுதூமை யென்கிறீர்
துறையறிந்து நீர்குளித்தா லன்றுதூமை யென்கிறீர்
பொறையிலாத நீசரோடும் பொருந்துமாற தெங்ஙனே. 133

சத்தம்வந்த வெளியிலே சலமிருந்துவந்ததும்
மத்தமாகி நீரிலேது வண்டுமூழ்கு மூடரே
சுத்தமேது சட்டதேது தூய்மைகண்டு நின்றதேது
பித்தர்காய முற்றதேது பேதமேது போதமே. 134

மாதமாதந் தூமைதான் மறந்துபோன தூமைதான்
மாதமற்று நின்றலோ வளர்ந்துருப மானது
நாதமேது வேதமேது நற்குலங்க ளேதடா
வேதமோதும் வேதியா விளைந்தவாறுபேசடா. 135

தூமையற்று நின்றலோ சுதிபமற்று நின்றது
ஆண்மையற்று நின்றலோ வழக்கமற்று நின்றது
தாண்மையற்று ஆண்மையற்றுசஞ்சலங்களற்றுநின்ற
தூமைதூமை யற்றகாலஞ் சொல்லுமற்று நின்றதே.

ஊறிநின்ற தூமையை யுறைத்துநின்ற சிவனை
வேறுபேசி மூடரே விளைந்தவாற தேதடா
நாறுகின்ற தூமையல்லோ நற்குலங்க ளாவன
சீறுகின்ற மூடரேயத் தூமைநின்ற கோலமே 137

தூமைகண்டு நின்றபெண்ணின் தூமைதானு மூறியே
சீமையெங்கு மாணும்பெண்ணும் சேர்ந்தலங் கண்டதே
தூமைதானும் ஆசையாய் துறந்திருந்த சிவனை
தூமையற்று நொண்டிருந்த தேசமேது தேசமே 138

வேணும்வேணு மென்றுநீர் வீணுழன்று தேடுவீர்
வேணுமென்று தேடினாலு முள்ளதல்ல தில்லையே
வேணுமென்று தேடுகின்ற வேட்கையைத் திறந்தபின்
வேணுமென்ற வப்பொருள் விரைந்துகாண லாகுமே

சிட்டரோது வேதமுஞ் சிறந்தவாக மங்களும்
நட்டகார ணங்களும் நவின்றமெய்ம்மை நூல்களும்
கட்டிவைத்த போதகங் கதைக்குகந்த பித்தெலாம்
பொட்டதாய் முடிந்ததே பிரானையா னறிந்தபின். 140

நூறுகோடி யாகமங்கள் நூறுகோடி மந்திரம்
நூறுகோடி நாளிருந்து மோதினா லதென்பயன்
ஆறுமாறு மாறுமா யகத்திலோ ரெழுத்துமாய்
ஏறுசீ ரெழுத்தையோத வீசன்வந்து பேசுமே. 141

காலைமாலை தம்மிலே கலந்துநின்ற காலனார்
மாலைகாலை யாய்ச்சிவந்த மாயமேது செப்பிடீர்
காலைமாலை யற்றுநீர் கருத்திலே யொடுங்கினால்
காலைமாலை யாகிநின்ற காலனில்லை யில்லையே. 142

எட்டுமண்ட லத்துளே யிரண்டுமண்ட லவ்வளைத்து
இட்டமண்ட லத்துளே பெண்ணரியாறு மண்டலம்
தொட்டமண்ட லத்திலே தோன்றிமூன்று மண்டலம்
நட்டமண்ட லத்துளே நாதனாடி நின்றதே. 143

நாலிரண்டு மண்டலத்துள் நாதனின்ற தெவ்விடம்
காலிரண்டு மூலநாடி கண்டதங் குருத்திரன்
சேரிரண்டு கண்கலந்து திசைகளெட்டு மூடியே
மேலிரண்டு தான்கலந்து வீசியாடி நின்றதே. 144

அம்மையப்ப னப்புநீ யறிந்ததே யறிகிலீர்
அம்மையப்ப னப்புநீ யரியய னரனுமாய்
அம்மையப்ப னப்புநீ ராதியாகி யானபின்
அம்மையப்ப னின்னையன்றி யாருமில்லை யானதே.

உருத்தரிப்ப தற்குமுன் னுடல்கலந்த தெங்ஙனே
கருத்தரிப்ப தற்குமுன் காரணங்க ளெங்ஙனே

பொருத்திவைத்தபோதலும்பொருந்துமாறதெங்ஙனே
குருத்திருத்தி வைத்தசொல் குறித்துணர்ந்து கொள்ளுமே.

ஆதியுண்டு வந்ததில்லை யன்றுநாலு வேதமில்
சோதியுண்டுசொல்லுமில்லைசொல்லிறந்ததேதுமில்லை
ஆதியான மூவரி லமர்ந்திருந்த வாயுவும்
ஆதியன்று தன்னையு மாரறிவ ரண்ணலே 147

புலால்புலால் புலாலதென்று பேதமைகள் பேசுநீர்
புலாலை விட்டு மெம்பிரான் பிரிந்திருந்த தெங்ஙனே
புலாலுமாயப் பித்துமாய்ப் பெருநலாவுந் தானுமாய்.
புலாலிலே முளைத்தெழுந்த பித்தர்கா ணுமத்தனே.

உதிரமான பால்குடித் தொக்கநீர் வளர்ந்ததும்
இரதமா யிருந்தகொன்றி ரண்டுபட்ட தென்கலாம்
மதிரமாக விட்டதேது மாங்கிசம்புலாலதென்று
சதிரமாய் வளர்ந்ததேது சைவரான மூடரே. 149

உண்டகல்லை யெச்சிலென் றுள்ளெறிந்து போடுநீர்
பண்டுமெச்சில் கையல்லோ பரமனுக்கும் தேறுமோ
கண்டவெச்சில் கேளடா கலந்தபாணி யப்பிலே
கொண்டசுத்த மேதடா குறிப்பிலாத மூடரே. 150

ஓதிவைத்த நூல்களு முணர்ந்துகற்ற கல்வியும்
மாதுமக்கள் சுற்றமு மறக்கவந்த நித்திரை
ஏதுபுக் கொளித்ததோ வெங்குமாகி நின்றதோ
சோதிபுக் கொளித்தமாயஞ் சொல்லடாசுவாமியே.

ஈணெருமையின்கழுத்திலிட்ட பொட்டணங்கள்போல்
மூணுநாலு சீலையில் முடிந்தவிழ்க்கு மூடர்காள்
மூணுநாலு லோகமு முடிவிலாத மூர்த்தியை
ஊணியூணி நீர்முடிந்த வுண்மையென்னவுண்மையே

சாவல்நாலு குஞ்சதஞ்சு தாயதான வாறுபோல்
காயமான கூட்டிலே கலந்துசண்டை கொள்ளுதே
கூவமான கிழநரிக் கூட்டிலே புகுந்தபின்
சாவல்நாலு குஞ்சதஞ்சுந் தானிறந்து போனதே. 153

மூலமாங் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை
காலமே யெழுந்திருந்து நாலுகட் டறுப்பிரேல்
பாலனாகி வாழலாம் பரப்பிரம மாகலாம்
ஆலமுண்ட கண்டர்பாத மம்மைபாத முண்மையே.

செம்பினிற் களிம்புவந்த சீதரங்கள் போலவே
சீவனுக் கழிவுவந்த சேதியேது செப்பிடீர்
அம்பினி லெழுதொணாத வணிபரங்க சோதியை
வெம்பிவெம்பி வெம்பியே மெலிந்துமேல் கலந்திட
செம்பினிற் களிம்புவிட்ட சேதியேது காணுமே. 155

காடிநாடி யும்முளே நயந்துகாண வல்லிரேல்
ஓடியோடி மீளுவா ரும்முளே யடங்கிடும்
தேடிவந்த காலனும் திகைத்திருந்து போய்விடும்
* கோடிகால மும்முகந் திருந்தவாற தெங்ஙனே 156

பிணங்குகின்ற தேதடா பிறந்திறந்துகெட்ட மூடரோ
பிணங்கிலாத பேரொளிப் பிராணனை யறிகிலீர்
பிணங்குமோ ரிருவினைப் பிணக்கறுக்க வல்லிரேல்
பிணங்கிலாத பெரியவின்பம் பெற்றிருக்க லாகுமே.

மீனிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
மீனிருக்கு நீரல்லோ மூழ்வதுங் குடிப்பதும்
ஆட்டிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
ஆட்டிறைச்சி யல்லவோ யாகநீங்க ளாற்றலே. 153

மாட்டிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
மாட்டிறைச்சி யல்லவோ மரக்கறிக் கிடுவது
மானிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
மானுரித்த தோலலோ மார்பினூ லணிவதும். 159

அக்கிடூ ரனைத்துயிர்க்கு மாதியாகி நிற்பது
முக்கிடூ ருமைப்பிடித்து குத்தரித்து விட்டது

---

* கோடிகோடி காலமுங்குறைவிலா திருப்பரோஎனவும்பாடம்.

மைக்கிடுற் பிறந்திறந்து மாண்டுமாண்டு போவது
மொக்கிடி லுமக்குநா னுணர்த்துவித்த துண்மையே.

ஐயன்வந்து மெய்யகம் புகுந்தவாற தெங்ஙனே
செய்யதிங்க ளங்குரும்பை நீர்புகுந்த வண்ணமே
ஐயன்வந்து மெய்யகம் புகுந்துகோவில் கொண்டபின்
வையகத்தில் மாந்தரோடு வாய்திறப்ப தில்லையே. 161

ஙவ்வுமவ்வை யுங்கடந்து நாடொணா தசியின்மேல்
வவ்வுயவ்வு ளுஞ்சிறந்த வன்மைஞான போதகம்
ஒவ்வுசத்தி யுண்ணிறைந் துச்சியூ டுருவியே
இவ்வகை யறிந்தபேர்க ளீசனுனை யீசனே. 162

அக்கர மனாதியோ வாத்தும மனாதியோ
புக்கிருந்த பூதமும் புலன்களு மனாதியோ
தக்கமிக்க நூல்களுஞ் சாத்திர மனாதியோ
தற்பரத்தை யூடறுத்த சற்குரு வனாதியே. 163

பார்த்ததேது பார்த்திடில் பார்வையூ டழிந்திடும்
கூத்ததா யிருப்பிரேல் குறிப்பிலச் சிவமதாம்
பார்த்த பார்த்த போதெலாம் பார்வையு மிகந்துநீர்
பூத்தபூவும் காயுமாய் பொருந்துவீர் பிறப்பிலே. 164

* நெற்றிபத்தி யுழலுகின்ற நீலமா வழங்கினைப்
ட்த்தியொத்தி நின்றுநின்று பற்றறுத்த தென்பலன்
உற்றிருந்து பாரடா வுள்ளொளிக்கு மேலொளி
அத்தனா யமர்ந்திட மறிந்தவன னாதியே. 165

நீரையள்ளி நீரில்விட்டு நீநினைந்த காரியம்
ஆரையுன்னி நீரெலா மவத்திலேயிறைக்கிறீர்
வேரையுன்னி வித்தையுன்னி வித்திலே முளைத்தெழுந்த
சீரையுன்ன வல்லிரேல் சிவபதங்கள் சேரலாம். 166

---

* நெற்றியிற் றயங்குகின்ற நீலமாம் விளக்கினை
யுய்த்துணர்ந்து பாரடா வுள்ளிருந்த சோதியைப்
பத்தியிற் றொடர்ந்தவர் பரமயாம தானவர்
அத்தலத் திருந்தபேர்க ளவனெனக்கு நாதரே. எனவும்பாடம்

கருத்தரிக்கு முன்னெலாம் காயம்நின்ற தெவ்விடம்
உருத்தரிக்கு முன்னெலா முயிர்ப்புநின்ற தெவ்விடம்
அருட்டரிக்கு முன்னெலா மாசைநின்ற தெவ்விடம்
திருக்கறுத்துக் கொண்டலோ சிவாயமென்று கூறுவீர்.

கருத்தரிக்கு முன்னெலாங் காயநின்ற தேயுவில்
உருத்தரிக்கு முன்னெலா முயிர்ப்புநின்ற தப்புவில்
அருட்டரிக்கு முன்னெலா மாசைநின்ற வாயுவில்
திருக்கறுத்துக் கொண்டதே சிவாயமென்று கூறுமே.

தாதரான தாதரும் தலத்திலுள்ள சைவரும்
கூத்தரைப் பறைச்சிமக்கள் கூடிசெய்த காரியம்
வீதிபோகு ஞானியை விரைந்துகல்லெறிந்ததும்
பாதகங்க ளாகவே பலித்ததே சிவாயமே. 170

ஓடியோடி பாவிழைத் துள்ளங்கால் வெளுத்ததும்
பாவியான பூனைவந்து பாலிலே குதித்ததும்
பணிக்கன்வந்து பார்த்ததும் பாரமில்லை யென்றதும்
இழையறுந்து போனதும் என்னமாய மீசனே. 171

சதுரம்நாலு மறையுமிட்டு தானதங்கி மூன்றுமே
எதிரதான வாயுவாறு எண்ணும்வட்ட மேவியே
உதிரந்தான் வரைகளெட்டு மெண்ணுமென் சிரசின்மேல்
கதிரதான காயகத்தில் கலந்தெழுந்த நாதமே. 172

நாலொடாறு பத்துமேல் நாலுமூன்று மிட்டபின்
மேலுபத்து மாறுடன் மேதிரண்ட தொன்றுமே
கோலியஞ் செழுத்துளே குருவிருந்து கூறிடில்
தோலுமேனி நாதமாய்த் தோற்றிநின்ற கோசமே.

கோசமா யெழுந்ததுங் கூடுருவி நின்றதும்
தேசமாப் பிறந்ததுஞ் சிவாயமஞ் செழுத்துமே
ஈசனா ரிருந்திட மனேகனேக மந்திரம்
ஆகமம் நிறைந்துநின்ற வைம்பத்தோ ரெழுத்துமே.

அங்கலிங்க பீடமா யையிரண் டெழுத்திலும்
பொங்குதா மறையிலும் பொருந்துவார் மனத்திலும்

பங்குகொண்ட சோதியும் பரந்தவஞ் செழுத்துமே
சிங்கநாத வோசையுஞ் சிவாயமல்ல தில்லையே. 175

உவமையில்லாப்பேரொளிக்குளுருவமானதெவ்விடம்
உவமையாகி யண்டத்தி லுருவிநின்ற தெவ்விடம்
தவமதான பரமனார் தரித்துநின்ற தெவ்விடம்
தற்பரத்தில் சலம்பிறந்து தாங்கிநின்ற தெவ்விடம்.

சுகமதாக வெருதுமூன்று கன்றையீன்ற தெவ்விடம்
சொல்லுகீழு லோகமேழும் நின்றவாற தெவ்விடம்
அவளதான மேருவும் அம்மைதான தெவ்விடம்
அவனு மவளு மாடலா லருஞ்சீவன் பிறந்ததே. 177

உதிக்குகின்ற தெவ்விட மொடுங்குகின்ற தெவ்விடம்
கதிக்குகின்ற தெவ்விடங் கன்றுறக்க மெவ்விடம்
மதிக்கநின்ற தெவ்விட மதிமயக்க மெவ்விடம்
விதிக்கவல்ல ஞானிகாள் விரித்துரைக்க வேணுமே.

திரும்பியாடு வாசலெட்டு திறமுரைத்த வாசலெட்டு
மருங்கிலாத கோலமெட்டு வன்னியாடு வாசலெட்டு
துரும்பிலாத கோலமெட்டு சுத்திவந்த மருளரே
அரும்பிலாத பூவுமுண் டையனாணை யுண்மையே,

தானிருந்து மூலவங்கி தணலெழுப்பி வாயுவால்
தேனிருந்து வரைதிறந்து தித்தியொன்றுவொத்தவே
வானிருந்த மதியமூன்று மண்டலம் புகுந்தபின்
ஊனிருந் தளவுகொண்ட யோகிநல்ல யோகியே. 180

முத்தனாய்நினைந்தபோது முடிந்தவண்டத் துச்சிமேல்
பத்தனாரு மம்மையும் பரிந்துவாட வாடினார்
சித்தரான ஞானிகாள் தில்லையாட லென்பிர்காள்
அத்தனாட லுற்றபோ தடங்கலாட லுற்றதே. 181

ஒன்றுமொன்றுமொன்றுமேயுலகனைத்துமொன்றுமே
அன்றுமின்று மொன்றுமே யனாதியான தொன்றுமே
கன்றல்நின்ற செம்பொனைக் களிம்பறுத்துநாட்டினால்
அன்றுதெய்வ மும்முளே யறிந்ததே சிவாயமே. 182

நட்டதா பரங்களும் நவின்ரசாத் திரங்களும்
இட்டமான வோமகுண்ட மிசைந்தநாலு வேதமும்
கட்டிவைத்த புத்தகம் கடும்பித்தற்றி தறகெலாம்.
பொட்டதாய் முடிந்ததே பிரானையா னறிபவே. 183

வட்டமான கூட்டிலே வளர்ந்தெழுந்த வம்புலி
சட்டமீ படைத்திலே சங்குசக் கரங்களாட்
விட்டதஞ் சுவாசலில் கதவுனு லடைத்தபின்
மூட்டையி லெழுந்தசீவன விட்டவாற தெங்ஙனே.

கோயில்பள்ளி யேதடா குறித்துநின்ற தேதடா
வாயினால் தொழுதுநின்ற மந்திரங்க ளேதடா
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியிற் காணலா மிறையையே. 185

நல்லவெள்ளி யாறதாய் நயந்தசெம்பு நாலதாய்
கொல்லுநாகமூன்றதாக் குலாவுசெம்பொனிரண்டதாய்
வில்லினோசை பொன்னுடன் விளங்கவூத வல்லிரேல்
எல்லையொத்த சோதியானை யெட்டுமாற்ற தாகுமே.

மனத்தகத் தழுக்கறாத மவுனஞான யோகிகள்
வனத்தகத் திருக்கினு மனத்தகத் தழுக்கறார்
மனத்தகத் தழுககறுத்த மவுனஞான யோகிகள்
முலைத்தடத் திருக்கினும் பிறப்பறுத் திருப்பரே. 187

உருவுமல்ல வொளியுமல்ல வொன்றதாகி நின்றதே
மருவுமல்ல கந்தமல்ல மந்தநாடி யுற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசுமாவி தானுமன்
றரியதாக நின்றநேர்மை யாவர்காண வல்லிரே. 188

ஓரெழுத் துலகெலா முதித்தவட் சரத்துளே
ஈரெழுத் தியம்புகின்ற வின்பமே தறிகிலீர்
மூவெழுத்து மூவராய் மூண்டெழுந்த மூர்த்தியை
நாலெழுத்து நாவிலே நவின்றதே சிவாயமே. 189

ஆகியந்த மூலவிந்து நாதமைந்து பூதமாய்
ஆதியந்த மூலவிந்து நாதமைந் தெழுத்துமாய்

ஆதியந்த மூலவிந்து நாதமேவி நின்றதும்
ஆதியந்த மூலவிந்து நாதமே சிவாயமே. 190

அன்னமிட்ட பேரெலா மனேககோடி வாழவே
சொன்னமிட்ட பேரெலாந் துரைத்தனங்கள் பண்ணலாம்
வின்னமிட்ட பேரெலாம் வீழ்வரெந் நரகிலே
கன்னமிட்ட பேரெலாங் கடந்துநின்ற தின்னமே. 191

ஓதொணாமல் நின்றநீ றுறக்கமூணு மற்றநீர்
சாதிபேத மற்றநீர் சங்கையன்றி நின்றநீர்
கோதிலாத வறிவிலே குறிப்புணர்ந்து நின்றநீ
ரேதுமன்றி நின்றநீ ரியங்குமாற தெங்ஙனே. 192

பிறந்தபோது கோவண மிலங்குநூல் குடுமியும்
பிறந்துடன் பிறந்ததோ பிறங்குநாற் சடங்கெலா
மறந்தநாலு வேதமும் மனத்துளே யுதித்ததோ
நிலம்பிளந்து வானிடிந்து நின்றதென்ன வல்லிரே.

சருத்தியுண்டு சொல்லனுண்டு சொர்ணமான சோதியுண்டு
திருத்தமாய் மனத்திலுன்னித் திகழவூத வல்லிரோல்
பெருத்ததூணி லங்கியே தியங்கதாய் விரிந்திடும்
நிருத்தமான சோதியு நீயுமல்ல தில்லையே. 194

வேடமிட்டு மணிதுலக்கி மிக்கதூப தீபமாய்
ஆடறுத்துகூறுபோட்ட வவர்கள்போலுமப்பண்ணுநீர்
தேடிவைத்த செம்பெலாந் திரள்படப் பரப்பியே
போடுகின்ற புட்பபூசை பூசையென்ன பூசையே. 195

முட்டுகண்ட தூமையின் முளைத்தெழுந்த சீவனை
கட்டிக்கொண்டு நின்றிடங் கடந்துநோக்க வல்லிரோல்
முட்டுமற்று கட்டுமற்று முடியினின்ற நாதனை
எட்டுதிக்குங் கையிலு லிருந்தவீட தாகுமே. 196

அருக்கனோடு சோமனு மதுக்குமப் புறத்திலே
நெருக்கியேறு தாரகை நெருங்கிநின்ற நேர்மையை
உருக்கியோ ரெழுத்துளே யொப்பிலாத வெளியிலே
யிருக்கவல்ல பேரலோ யினிப்பிறப்ப தில்லையே. 197

மூலவட்ட மீதிலே முளைத்தவஞ் செழுத்தின்மேல்
கோலவட்ட மூன்றுமாய்க் குலைந்தலைந்து நின்றநீர்
ஞானவட்ட மன்றுளே நவின்றஞான மாகிலோ
ஏலவட்ட மாகியே யிருந்ததே சிவாயமே. 193

சுக்கிலத் திசையுளே சுரோணிதத்தின் வாசலுள்
முச்சதிர மெட்டுளே மூலாதார வறையிலே
அச்சமற்ற சவ்வுளே யரியரனு மயனுமாய்
உச்சரிக்கு மந்திர முண்மையே சிவாயமே. 199

பூவுநீரு மென்மனம் பொருந்துகோயி லென்னுளம்
ஆவியோடி லிங்கமா யகண்டமெங்கு மாகினும்
மேவுகின்ற ஐவரும் விளங்குதீப தீபமாய்
ஆடுகின்ற கூத்தனுக்கோ ரந்திசந்தி யில்லையே. 200

உருக்கலந்த பின்னல்லோ வுன்னைநா னறிந்தது
இருக்கிலென் மறக்கிலென் னினைந்திருந்த போதெலாம்
உருக்கலந்து நின்றபோது நீயுநானு மொன்றலோ
திருக்கலந்த போதலோ தெளிந்ததே சிவாயமே. 201

சிவாயமஞ் செழுத்திலே தெளிந்துதேவ ராகலாம்
சிவாயமஞ் செழுத்துளே தெளிந்துவான மாளலாம்
சிவாயமஞ் செழுத்துளே தெளிந்துகொண்ட வான்பொருள்
சிவாயமஞ் செழுத்துளே தெளிந்துகொள்ளு முண்மையே.

பொய்க்குடத் திலைந்தொதுங்கி போகம்வீசு மாறுபோல்
இச்சடமு மிந்தியமும் நீருமே லலைந்ததே
உக்குடஞ் சவத்தைமொண் டமர்ந்திருந்த வாறுபோல்
இச்சடஞ் சிவத்தைமொண்டு கந்தமர்ந் திருப்பதே.

பட்டமுங் கயறுபோல் பறக்கநின்ற சீவனை
பார்வையாலே பார்த்துநீ படுமுடிச்சுப் போடடா
திட்டவும் படாதடா சீவனை விடாதடா
கட்டடாநீ சிக்கெனக் களவறிந்த கள்ளனை. 204

அல்லிறந்து பகலிறந்த கம்பிரம மிறந்துபோய்
அண்டரண்ட முங்கடந் தனேகனேக ரூபமாய்

சொல்லிறந்து மனமிறந்த சுகசொரூப வுண்மையைச்
சொல்லியாற வென்னில வேறு துணைவரில்லை யானதே.

ஐயிரண்டு திங்களா யடங்கிநின்ற தாமைதான்
கையிரண்டு காலிரண்டு கண்ணிரண்டு மாகியே
மெய்திரண்டு சத்தமாய் விளங்கிரச கந்தமும்
துய்யகாய மானதுஞ் சொல்லுகின்ற தாமையே. 206

அங்கலிங்க பீடமு மசவைமூன் றெழுத்தினுஞ்
சங்குசக் கரத்தினுஞ் சகலவா னசத்தினும்
பங்குகொண்ட யோகிகள் பரமவாச லஞ்சினும்
சிங்கநாத வோசையுஞ் சிவாயமல்ல தில்லையே. 207

அஞ்செழுத்து மூன்றெழுத்து மென்றுரைக்கு மன்பர்காள்
அஞ்செழுத்து மூன்றெழுத்து மல்லகாணு மப்பொருள்
அஞ்செழுத்து நெஞ்சழுத்தி அவ்வெழுத் தறிந்தபின்
அஞ்செழுத்து மவ்வின்வண்ண மானதே சிவாயமே.

ஆதரித்த மந்திர மமைந்தவாக மங்களும்
மாதர்மக்கள் சுற்றமு மயக்கவந்த நித்திரா
ஏதுபுக் கொளித்ததோ வெங்குமாகி நின்றதோ
சோதிபுக் கொளித்திடஞ் சொல்லடா சுவாமியே. 209

அக்கர மனாதியோ வாத்துமா வனாதியோ
புக்கிருந்த பூதமும் புலன்களு மனாதியோ
தக்கமிக்க நூல்களுஞ் சதாசிவ மனாதியோ
மிக்கவந்த யோகிகாள் விரைந்துரைக்க வேணுமே.

ஒன்பதான வாசலு மொழியுநா ளிருக்கையில்
ஒன்பதாம ராமராம நாமமென்று நாமமே
வன்மமான பேர்கள்வாக்கில் வந்துநோ யடைப்பராம்
அன்பரான பேர்கள்வாக்கி லாய்ந்தமைந் திருப்பதே.

அள்ளிநீரை விட்டதேத கங்கையிற் குழைத்ததேது
மெள்ளவே மிணமிணென்று விளம்புகிற்கு மூடர்காள்
கள்ளவேட மிட்டதேது கண்ணைமூடி விட்டதேது
மெள்ளவே குருக்களே விளம்பிடீர் விளம்பிடீர். 212

அன்னைகர்ப்பத் தூமையி லவதரித்த சுக்கிலம்
முன்னையே தரித்ததும் பனித்துளிபோ லாகுமே
உன்னிதொக்கு ளெழலுந்தூமை யுள்ளுளேயடங்கிடும்
பின்னையே பிறப்பதுந் தூமைகாணும் பித்தரே. 213

அழுக்கறத்தி னங்குரித் தழுக்கறுத மாந்தரே
அழுக்கிருந்த தெவ்விட மழுக்கிலாத தெவ்விடம்
அழுக்கிருந்த தவ்விடத் தழுக்கறுக்க வல்லிரேல்
அழுக்கிலாத சோதியோ டணுகிவாழ லாகுமே. 214

அணுத்திரண்ட கண்டமா யனைத்துபல்லியோனியாய்
மனுப்பிறந் தோதிவைத்த நூலிலே மயங்குறீர்
சனிப்பதேது சாவதேது தாபரத்தி னூடுபோய்
நினைப்பதேது நிற்பதேது நீர்நினைந்து பாருமே. 215

ஆதியாகி யண்டரண்ட மப்புறத்து மப்புறம்
சோதியாகி நின்றிலங்கு சுருதிநாத சோமனை
பேதியாமல் தம்முளே பெற்றுணர்ந்த ஞானிகள்
சாதிபேத மென்பதொன்று சற்றுமில்லை யில்லையே.

ஆக்கைமுப்ப தில்லையே யாதிகா ரணத்திலே
நாக்கைமூக்கை யுள்மடித்து நாதநாடி யூடுபோய்
ஏக்கறுத்தி ரெட்டையு மிறுக்கமூத்த வல்லிரேல்
பார்க்கப்பார்க்க பிதிக்கெலாம் பரப்பிரமமாகுமே 217

அஞ்சுமஞ்சு மஞ்சுமஞ்சு மல்லல்செய்து நிற்பதும்
அஞ்சுமஞ்சு மஞ்சுமே யமர்ந்துளே யிருப்பதும்
அஞ்சுமஞ்சு மஞ்சுமே யாதரிக்க வல்லிரேல்
அஞ்சுமஞ்சு மும்முளே யமர்ந்ததேசிவாயமே. 218

அஞ்செழுத்தி லாதியா யமர்ந்துநின்ற தேதடா
நெஞ்செழுத்தி நின்றுகொண்டு நீசெபிப்ப தேதடா
அஞ்செழுத்தின் வாளதா லறுப்பதாவ தேதடா
பிஞ்செழுத்தி னேர்மைதான் பிரித்துரைக்க வேண்டுமே.

உயிரிருந்த தெவ்விட முடம்பெடுப்ப தின்முனம்
உயிரதாவ தேதடா வுடம்பதாவ தேதடா

உயிரையு முடம்பையு மொன்றுவிப்ப தேதடா
உயிரினு லுடம்பெடுத்த வுண்மைஞானி சொல்லடா

சுழித்தவோ ரெழுத்தையுஞ் சொன்முகத்திருத்தியே
துன்பவின்ப முங்கடந்து சொல்லுமூல நாடிகள்
அழுத்தமான வக்கர மங்கியுள் ளெழுப்பியே
ஆறுமங்கை யுட்கலந் தப்புறத் தலத்துளே. 221

உருத்தரிப்ப தற்குமுன் னுயிர்புகுந்து நாதமும்
கருத்தரித்த தற்குமுன் காயமென்ன சோணிதம்
அருட்டரிப்ப தற்குமுன் னறிவுமூலா தாரமாம்
குருத்தறிந்து கொள்ளுவீர் குணங்கெடுங் குருக்களே

எங்குமுள்ள வீசனு ரெம்முடல் புகுந்தபின்
பங்குகூறு பேசுவார் பாடுசென் றணுகிலார்
எங்கள்தெய்வமுங்கள்தெய்வ மென்றிரண்டுபேதமோ
உங்கள்பேத மன்றியே வுண்மைரண்டு மில்லையே.

அரியுமாகி யயனுமாகி யண்டமெங்கு மொன்றதாய்
பெரியதாகி யுலகுதன்னில் நின்றபாத மொன்றலோ
விரிவிதென்று வேறுசெய்து வேடமிட்ட மூடரே
அறிவினோடு பாருமிங்கு மங்குமெங்கு மொன்றதே.

வெந்தநீறு மெய்க்கணிந்து வேடமுந் தரிக்கிறீர்
சிந்தையுள் நினைந்துமே தினஞ்செபிக்குமந்திரம்
முந்தமந் திரத்திலோ மூலமந்தி ரத்திலோ
எந்தமந்தி ரத்திலோ வீசன்வந் தியங்குமே. 225

அகாரகா ரணத்திலே யனேகனேக ரூபமாய்
உகாரகா ரணத்திலே யுருத்தரித்து நின்றனன்
மகாரகா ரணத்திலே மயங்குகின்ற வையகம்
சிகாரகா ரணத்திலே தெளிந்ததே சிவாயமே. 226

அவ்வெழுந்தி லுவ்வுவந்த காரமுஞ் சனித்ததோ
உவ்வெழுத்து மவ்வெழுத்து மொன்றையொன்றுநின்றதோ
செவ்வையொத்து நின்றலோ சிவபதங்கள் சேரினும்
மிவ்வையொத்தஞானிகாள் விரித்துரைக்கவேணுமே.

ஆதியான வஞ்சிலு மஞ தியான நாலிலும்
சோதியான மூன்றிலுஞ் சுரூபமற்ற வொன்றிலும்
நீதியான தொன்றிலே நிறைந்துநின்ற வஸ்துவை
ஆதியான தொன்றுமே யற்றதஞ் செழுத்துமே. 228

வானிலாத தொன்றுமில்லை வானுமில்லை வானிடில்
ஊனிலாத தொன்றுமில்லை யூனுமில்லை யூனிடில்
நானிலாத தொன்றுமில்லை நானுமில்லை நண்ணிடில்
தானிலாத தொன்றுமே தயங்கியாடு கின்றதே. 229

சுழித்ததோ ரெழுத்தையுள்ளி சொல்முகத்திருத்தியே
துன்பவின்ப முங்கடந்து சொல்லும்நாடி யூடுபோய்
அழுத்தமான வக்கரத்தி னங்கியை யெழுப்பியே
ஆறுபங்க யங்கடந் தப்புறத்து வெளியிலே. 230

விழித்தகண் குவித்தபோ தடைந்தபோ தெழுத்தெலாம்
விளைந்துவிட்ட விந்திரசால வீடதான வெளியிலே
அழுந்தினலு மதிமயங்கி யனுபவிக்கும் வேளையில்
அவனுமுண்டு நானுமில்லை யாருமில்லை யானதே. 231

நல்லமஞ் சனங்கள்தேடி நாடிநாடி யோடுநீர்
நல்லமஞ் சனங்களுண்டு நாதனுண்டு நம்முளே
எல்லமஞ் சனங்கள்தேடி யேகபூசை பண்ணினல்
தில்லைமேவு சிவனுஞ் சிவபதத்து ளாடுமே. 132

உயிரகத்தில் நின்றிடு முடம்பெடுத்த தற்குமுன்
உயிரகார மாயிடு முடலுகார மாயிடும்
உயிரையு முடம்பையு மொன்றுவிப்ப தச்சிவம்
உயிரினு லுடம்புதா னெடுத்தவா றுரைக்கினே. 233

அண்டமேழு முழலவே யனந்தயோனி யுழலவே
பண்டுமா லயனுடன் பரந்துநின் றுழலவே
எண்டிசை கடந்துநின் றிருண்டசத்தி யுழலவே
அண்டரண்ட மொன்றதா யாதிநட்ட மாடுமே. 234

உருவநீ ருறுப்புகொண் டுருத்தரித்து வைத்திடும்
பெரியபாதை பேசுமோ பிசாசையொத்த மூடரே

கரியமாலு மயனுமாக் காணொணாத கடவுளை
உரிமையாக வும்முளே யுணர்ந்துணர்ந்து கொள்ளுமே. 235

பண்ணிவைத்த கல்லையும் பழம்பொருள தென்றுநீர்
எண்ணமுற்றுமென்னபே றுரைக்கிறீர்களேழைகாள்
பண்ணவும் படைக்கவும் படைத்துவைத் தளிக்கவும்
ஒண்ணுமாகியுலகளித்தவொன்றைநெஞ்சிலுன்னுமே

நாலதான யோனியுள் நவின்றவிந்து மொன்றதாய்
ஆலதான வித்துளே யமர்ந்தொடுங்கு மாறுபோல்
சூலதான வுற்பனஞ் சொல்வதான மந்திரம்
மேலதான ஞானிகாள் விரித்துரைக்க வேணுமே. 137

அருவமா யிருந்தபோ தன்னையங் கறிந்திலை
உருவமா யிருந்தபோ துன்னைநா னறிந்தனன்
குருவினால் தெளிந்துகொண்டு கோதிலாத ஞானமாம்
பருவமான போதமோ பரப்பிரம மானதே. 238

பிறப்பது மிறப்பதும் பிறந்திடா திருப்பதும்
மறப்பது நினைப்பது மறந்ததைத் தெளிந்ததுந்
துறப்பதுந் தொடுப்பதுஞ் சுகித்துவாரி யுண்பதும்
பிறப்பது மிறப்பதும் பிறந்தவீட டங்குமே. 239

கண்ணிலே யிருப்பனே கருங்கடல் கடைந்தமால்
விண்ணிலே யிருப்பனே மேவியங்கு நிற்பனே
தன்னுளே யிருப்பனே தராதலம் படைத்தவன்
என்னுளே யிருப்பனே யெங்குமாகி நிற்பனே. 240

ஆடுநாடு தேடினு மானைசேனை தேடினும்
கோடிவாசி தேடினுங் குறுக்கேவந்து நிற்குமோ
ஓடியிட்ட பிச்சையு முகந்துசெய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல தர்மம்வந்து நிற்குமே. 241

எள்ளிரும்பு கம்பிளி யிடும்பருத்தி வெண்கலம்
அள்ளியுண்ட நாதனுக்கோ ராடைமாடை வஸ்திரம்
உள்ளிருக்கும் வேதியர்க் குற்றதான மீதிரால்
வெள்ளவந்து நோயனைத்து மீண்டிடுஞ் சிவாயமே.

ஊரிலுள்ள மனிதர்கா ளொருமனதாய்க் கூடியே
தேரிலே வடத்தையிட்டு செம்பைவைத் திழுக்கிறீர்
ஆரினாலு மறிபொணாத வாதிசித்த நாதனை
பேதையான மனிதர்பண்ணும் பிரளிபாரும் பாருமே.

மருள்புகுந்த சிந்தையால் மயங்குகின்ற மாந்தரே
குருக்கொடுத்த மந்திரங் கொண்டுநீந்த வல்லிரோல்
குருக்கொடுத்த தொண்டருங் குகனெடிந்தபிள்ளையும்
பருத்திபட்ட பன்னிரண்டு பாடுதான் படுவரே. 244

அன்னைகர்ப்ப வறையதற்கு ளங்கியின்பிர காசமாய்
அந்தவறைக்குள் வந்திருந் தரியவிந்து ரூபமாய்
தன்னையொத்து நின்றபோது சடையறுத்து வெளியதாய்
தங்கநற் பெருமைதந்து தலைவனாய் வளர்ந்ததே. 245

உன்னையற்ப நேரமு மறந்திருக்க லாகுமோ
உள்ளமீ துறைந்தெனை மறப்பிலாத சோதியை
பொன்னைவென்ற பேரொளிப் பொருவிலாத வீசனே
பொன்னடிப் பிறப்பிலாமை யென்றுநல்க வேணுமே.

பிடித்ததென்டு மும்மதோ பிரமமான பித்தர்காள்
கடித்தகோல மத்தைவிட்டு சாதிபேதங்கொண்மினோ
வடித்திருந்த தோர்சிவத்தை வாய்மைகூற வல்லிரோல்
திடுக்கமுற்ற வீசனைச் சென்றுகூட லாகுமே. 247

சத்திநீ தயவுநீ தபங்குசங்கி னைசநீ
சித்திநீ சிவனுநீ சிவாயமா மெழுத்துநீ;
முத்திநீ முதலுநீ மூவரான தேவர்நீ
அத்திபூர மும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே.

சட்டையிட்டு மணிதுலங்குஞ் சாத்திரச் சழக்கரே
பொஸ்தகத்தை மெத்தவைத்து போதமோதும் பொய்யரே
நிட்டையேது ஞானமேது நீரிருந்த வக்ஷரம்
பட்டையேது சொல்லிரோ பாதகக் கபடரே. 249

உண்மையான சுக்கில முபாயமா யிருந்ததும்
வெண்மையாகி நீரிலே விரைந்துநீர தானதும்

தன்மையான காயமே தரித்துருவ மானதும்
தெண்மையான ஞானிகாள் தெளிந்துரைக்க வேணுமே.250

வஞ்சகப் பிறவியை மனத்துளே விரும்பியே
அஞ்செழுத்தி னுண்மையை யறிவிலாத மாந்தர்காள்
வஞ்சகப் பிறவியை வதைத்திடவும் வல்லிரேல்
அஞ்செழுத்தினுண்மையை யறிந்துகொள்ளலாகுமே.

காயிலாத சோலையிற் கனியுகந்த வண்டுகள்
ஈயிலாத தேனையுண் டிராப்பக லுறங்குநீர்
பாயிலாத கப்பலேறி யக்கரைப் படுமுனே
* வாயினு லுரைப்பதாகு மோமவுன ஞானமே. 252

பேய்கள்பேய்க ளென்கிறீர் பிதற்றுகின்ற பேயர்காள்
பேய்கள்பூசைகொள்ளுமோ பிடாரிபூசைகொள்ளுதே
ஆதிபூசை கொள்ளுமோ வநாதிபூசை கொள்ளுதோ
காயமான பேயலோ கணக்கறிந்து கொண்டதே. 253

மூலமண்ட லத்திலே முச்சதுர மாதியாய்
நாலுவாச லெம்பிரான் நடுவிதித்த மந்திரம்
கோலிவெட் டிதழுமாய்க் குளிர்ந்தலர்ந்த தீட்டமாய்
மேலும்வேறு காண்கிலேன் விளைந்ததே சிவாயமே.

ஆதிகூடு நாடியோடு சாலைமாலை நீரிலே
சோதிமூல மானநாடி சொல்லிறந்த தூவெளி
யாதிகூடு நெற்பறித்த காரமாதி யாகமம்
பேதபேத மாகியே பிறந்துட லிறந்ததே. 255

பாங்கினோ டிருந்துகொண்டு பரமனஞ் செழுத்துளே
யோங்கிநாடி மேலிருந்து உச்சரித்த மந்திரம
மூங்கில்வெட்டி நாருரித்து முச்சிலதை விதத்தினி
ஞய்ந்தநூலிற்றோன்றுமே யறிந்துணர்ந்து கொள்ளுமே

புண்டரீக மத்தியி லுதித்தெழுந்த சோதியை
மண்டலங்கள் மூன்றினோடு மன்னுகின்ற மாயனை

*லாயிலாயியென்னுங்கள் வாயிலாதமூடரோ எனவும் பாடம்-

அண்டரண்ட மூடறுத் தறிந்துணர வல்லிரேல்
கண்டகோயில்தெய்வமென்று கையெடுப்ப தில்லையே

அம்பலங்கள் சந்தியி லாடுகின்ற வம்பனே
அன்பனுக்கு என்பனாய் நிற்பனாதி வீரனே
அன்பருக்கு என்பராய் நின்றவாதி நாயனே
உன்பருக்கு வுண்மையாய் நின்றவுண்மை யுண்மையே. 258

அண்ணலாவ தேதடா வறிந்துரைத்த மந்திரம்
தண்ணனாக வந்தவன் சகலபுராணங் கற்றவன்
கண்ணனாக வந்தவன் காரணத் துதித்தவன்
ஒண்ணதாவ தேதடா வுண்மையான மந்திரம். 259

எள்ளதோர் புறம்பதோ ருயிரொடுங்கி நின்றிடம்
மெள்ளவந்து கிட்டிநீர் வினவவேணு மென்கிறீர்
உள்ளதும் புறம்பது மொத்தபோது நாதமாம்
கள்ளவாச லைத்திறந்து காணவேணு மப்பனே. 260

ஆரலைந்து பூதமா யளவிடாத யோனியும்
பாரமான தேவரும் பழுதிலாத பாசமும்
ஓரொணாத வண்டமு மூலோக லோக லோகமும்
சேரவெந்து போயிருந்த தேகமேது செப்புமே. 261

என்னகத்து ளென்னைநா னெங்குநாடி யோடினேன்
என்னகத்து ளென்னைநா னறிந்திலாத தாகையால்
என்னகத்து ளென்னைநா னறிந்துமெய் தெரிந்தபின்
என்னகத்து ளென்னையன்றி யாதுமொன்று மில்லையே.

விண்ணினின்றுமின்னெழுந்து மின்னொடுங்கும்வாறுபோல்
என்னுள்நின்று மெண்ணுமீச னென்னகத் திருக்கையால்
கண்ணினின்ற கண்ணில்தோன்றும் கண்ணறிவி லாமையால்
என்னுணின்ற வென்னையு மியானறிந்த தில்லையே. 263

அடக்கினு மடக்கொணாத வம்பலத்தி னூடுபோய்
அடக்கினு மடக்கொணாமை லன்புருக்கு மென்றுளே
கிடக்கினு மிருக்கினுங் கிலேசம்வந் திருக்கினும்
நடக்கினு மிடைவிடாத நாதசங் கொலிக்குமே. 264

மட்டுலாவு தண்டுழா யலங்கலாய் புனற்கழல்
விட்டுவீழில் தாகபோக விண்ணில்கண்ணில் வெளியினும்
எட்டினோடி ரண்டினு மிதத்தினால் மனந்தனைக்
கட்டிவீடி லாதுவைத்த காதலின்ப மாகுமே. 265

ஏகமூர்த்தி மூன்றுமூர்த்தி நாலுமூர்த்தி நன்மைசேர்
போகமூர்த்தி புண்ணியத்தில் மூர்த்தியன்றி மூர்த்தியாய்
நாகமூர்த்தி சயனமாய் நலங்கடல் கடந்ததீ
யாகமூர்த்தி யாகிநின்ற தென்கொலாதி தேவனே. 266

மூன்றுமுப்பத் தாறினோடு மூன்றுமூன்று மாயமாய்
மூன்றுமூர்த்தி யாகிமூன்று மூன்றுமூன்று மூன்றுமாய்த்
தோன்றுசாதி மூன்றதாய்த் துலக்கமில் விளக்கதாய்
ஏன்றனாவி னுள்புகுந்த தென்கொலோநம் மீசனே.

ஐந்துமைந்து மைந்துமா யல்லவற்று ளாயுமாய்
ஐந்துமூன்று மொன்றுமாகி நின்றவாதி தேவனே
ஐந்துமைந்து மைந்துமாய மைந்தனைத்து நின்றநீ
ஐந்துமைந்து மாயநின்னை யாவர்காண வல்லரே. 268

ஆறுமாறு மாறுமாயொ ரைந்துமைந்து மைந்துமாய்
ஏறுசீ ரிரண்டுமூன்று மேழுமாறு மெட்டுமாய்
வேறுவேறு ஞானமாகி மெய்யினோடு பொய்யுமாய்
ஊறுமோசை யாயமர்ந்த மாயமாய மாயனே. 269

எட்டுமெட்டு மெட்டுமாயொ ரேழுமேழு மேழுமாய்
எட்டுமூன்று மொன்றுமாகி நின்றவாதி தேவனே
எட்டுமாய பாதமோ டிறைஞ்சிநின்ற வண்ணமே
எட்டெழுத்து மோதுவார்க ளல்லனீக்கி நிற்பரே. 270

பத்தினோடு பத்துமாயொ ரேழினோடு மொன்பதாய்
பத்துநாற் றிசைக்குநின்ற நாடுபெற்ற நன்மையாய்
பத்துமாய கொத்தமோடு மத்தலமிக் காதிமால்
பத்தர்கட்க லாதுமுத்தி முத்திமுத்தி யாகுமே. 271

வாசியாகி நேசமொன்றி வந்தெதிர்ந்த தென்னுக
நேசமாக நாளுலாவ நன்மைசேர்ப வங்களில

வீசிமேல் நிமிர்ந்ததோளி யில்லையாக்கி னுய்கழல்
ஆசையால் மறக்கலா தமரராக லாகுமே. 272

எளியதான காயமீதி லெம்பிரா னிருப்பிடம்
அளிவுருது நின்றதே அகாரமும் உகாரமும்
கொளுகையான சோதியுங் குலாவிநின்ற தவ்விடம்
வெளியதாகு மொன்றிலே விளைந்ததே சிவாயமே.

அஞ்செழுத்து மூன்றெழுத்து மென்றுரைக்கு மன்பர்காள்
அஞ்செழுத்து மூன்றெழுத்து மல்லகாணுமப்பொருள்
அஞ்செழுத்தை நெஞ்செழுத்தி யவ்வெழுத்தறிந்தபின்
அஞ்செழுத்து மூன்றெழுத்து மவ்வுமாஞ் சிவாயமே.

பொய்யுரைக்க போதமென்று பொய்யருக் கிருக்கையால்
மெய்யுரைக்க வேண்டுதில்லை மெய்யர்பெய்க் கிலாமைபால்
வையகத்தி லுண்மைதன்னை வாய்திறக்க வஞ்சினேன்
மையவைத்த தென்கொலோ நமசிவாய நாதனே. 275

ஒன்றைபொன்றுகொன்றுட னுணவுசெய் திருக்கினும்
மன்றினூடு பொய்களவு மாறுவேறு செய்யினும்
பன்றிதேடு மீசனைப் பரிந்துகூட வல்லிரேல்
அன்றுதேவ ரும்முளே யறிந்துணர்ந்துகொள்ளுமே.

மச்சகத்து ளேயிவர்ந்து மாயைபேசும் வாயுவை
அச்சகத்து ளேயிருந் தறிவுணர்த்திக் கொள்விரேல்
அச்சகத்து ளேயிருக் தறிவுணர்த்தி கொண்டபின்
இச்சையற்ற வெம்பிரா னெங்குமாகி நிற்பனே. 277

வயலிலே முளைத்தசெங்நெல் களையதான வாறுபோல்
உலகினோரும் வண்மைகூறி லவ்வுமாற தங்ஙனே
விரகிலே முளைத்தெழுந்த மெய்யலாது பொய்யதாய்
நரகிலே பிறந்திருந்து நாடுபட்ட பாடதே. 278

ஆடுகின்ற வெம்பிரானை யங்குமிங்கு மென்றுநீர்
தேடுகின்ற பாவிகாள் தெளிந்ததொன்றையோர்கிலீர்
காடுநாடு வீடுவிண் கலந்துநின்ற கள்வனை
நாடியோடி யும்முளே நயந்துணர்ந்து பாருமே. 279

ஆடுகின்ற வண்டர்கூடு மப்புற மதிப்புறம்
தேடுநாலு வேதமுந் தேவரான மூவரும்
நீடுவாழி பூதமும் நின்றதோர் நிலைகளும்
ஆடுவாழி னொழியலா தனைத்துமில்லை யில்லையே. 280

ஆவதும் பரத்துளே யழிவதும் பரத்துளே
போவதும் பரத்துளே புகுவதும் பரத்துளே
தேவரும் பரத்துளே திசைகளும் பரத்துளே
யாவரும் பரத்துளே யானுமப் பரத்துளே. 281

ஏழுபா ரெழுகட லிடங்களெட்டு வெற்புடன்
சூழுவான் கிரிகடந்து சொல்லுமே ழுலகமும்
ஆழிமால் விசும்புகொள் பிர்மாண்டரண்டவண்டமும்
ஊழியா னொளிக்குளே யுதித்துட னொடுங்குமே. 282

கயத்துநீ ரிறைக்கிறீர் கைகள்சோர்ந்து நிற்பதேன்
மனத்துளீர மொன்றிலாத மதியிலாத மாந்தர்காள்
அகத்துளீரங் கொண்டுநீ ரழுக்கறுக்க வல்லிரேல்
நினைத்திருந்த வோதியும் நீயும்நானு மொன்றரோ.

நீரிலே பிறந்திருந்து நீர்சடங்கு செய்கிறீர்
ஆரையுன்னி நீரெலா மவத்திலே யிறைக்கிறீர்
வேரையுன்னிவித்தையுன்னிவித்திலேமுளைத்தெழுஞ்
சீரையுன்ன வல்லிரேற் சிவபத மடைவிரே. 284

பத்தொடத்த வாசலிற் பரந்துமூல வக்கர
முத்திசித்தி தொந்தமென் றியங்குகின்ற மூலமே
மத்தசித்த வைம்புலன் மகாரமான கூத்தையே
அத்தியூரர் தம்முளே யமைந்ததே சிவாயமே. 285

அறிவினோடு மண்டமா யளவிடாத சோதியை
குணமதாகி யும்முளே குறித்திருக்கில் முத்தியா
முனைமுனென்று உம்முளே விரலையொன்றி மீளவும்
தினந்தின மயக்குவீர் செம்புபூசை பண்ணியே. 286

மூலமான வக்கர முகப்பதற்கு முன்னெலாம்
மூடமாக மூடுகின்ற மூடமேது மூடரே

காலனை வஞ்சகூத மஞ்சிலே யொடுங்கினால்
ஆதியோடு கூடுமோ வனாதியோடு கூடுமோ. 287

முச்சதுர மூலமாகி முடிவுமாகி யேகமாய்
அச்சதுரமாகியே யடங்கியோ ரெழுத்துமாய்
மெய்ச்சதுர மெய்யுளே விளங்குஞான தீபமாய்
உச்சரிக்கு மந்திரத்தி னுண்மையே சிவாயமே. 288

வண்டுலங்கள் போலுநீர் மனத்துமா சறுக்கிலீர்
குண்டலங்கள் போலேநீர் குளத்திலே முழுகுநீர்
பண்டிமுங்கள் நான்முகன் பறந்துதேடி காண்கிலான்
கண்டிருக்கு மும்முளே கலந்திருப்பர் காணுமே. 289

நின்றதன் றிருந்ததன்று நேரிதன்று கூரிதன்று
பந்தமன்று வீடுமன்று பரவகங்க ளற்றது
கெந்தமன்று கேள்வியன்று கேடிலாத வானிலே
அந்தமன்றி நின்றதொன்ற தெங்ஙனே யுரைப்பதே.

பொருந்துநீரு மும்முளே புகுந்துநின்ற காரணம்
எருதிரண்டுகன்றையீன்ற வேகமொன்றையோர்கிலீர்
அருகிருந்து சாவுகின்ற யாவையு மறிந்திலீர்
குருவிருந் துலாவுகின்ற கோலமென்ன கோலமே.

அப்பரத்து ளாடுகின்ற வஞ்செழுத்து நீயலோ
சிம்புளாய் பறந்துநின்ற சிற்பரமு நீயலோ
எம்பிரானு மெவ்வுயிர்க்கு மேகபோக மாதலால்
எம்பிரானு நானுமா யிருந்ததே சிவாயமே. 292

ஈரொளிய திங்களே யியங்கிநின்ற தப்புறம்
பேரொளிய திங்களே யாவரு மறிகிலீர்
காரொளிப் படலமுங் கடந்துபோன தற்பரம்
பேரொளிப் பெரும்பத யேகநாத பாதமே. 293

கொள்ளொணாது மெல்லொணாது கோதறக்கு தட்டொணா
தள்ளொணா தணுகொணா தாழலான் மனத்துளே
தெள்ளொணாது தெளியொணாது சிற்பரத்தி னுட்பயன்
விள்ளொணாது பொருளைநான் விளம்புமா றதெங்ஙனே

வாக்கினால் மனத்தினால் மதித்தகா ரணத்தினால்
நோக்கொணாதநோக்கையுன்னி நோக்கையாவர் நோக்குவார்
நோக்கொணாத நோக்குவந்து நோக்கநோக்க நோக்கிடில்
நோக்கொணாத நோக்குவந்து நோக்கையெங்க ணோக்குமே.

உள்ளினும் புறம்பினு முலகமெங்க ணும்பரந்
தெள்ளிலெண்ணெய் போலநின் றியங்குகின்ற வெம்பிரான்
மெள்ளவந்தெ னுட்புகுந்து மெய்த்தவம் புரிந்தபின்
வள்ளலென்னவள்ள லுக்குவண்ண மென்னவண்ணமே.

வேதமொன்று கண்டிலேன் வெம்பிறப்பி லாமையால்
போதநின்ற வடிவதாய்ப் புவனமெங்கு மாயினாய்
சோதியுள் ளொளியுமாய்த் துரியமோட தீதமாய்
ஆதிமூல மாதியா யமைந்ததே சிவாயமே. 297

சாணிரு மடங்கினாற் சரிந்தகொண்டை தன்னுளே
பேணியப் பதிக்குளே பிறந்திறந் துழலுவீர்
தோணியான வைவரைத் துறந்தறுக்க வல்லிரேல்
காணிகண்டு கோடியாக் கலந்ததே சிவாயமே. 298

அஞ்சுகோடி மந்திர மஞ்சுளே யடங்கினால்
நெஞ்சுகூற வும்முளே நினைப்பதோ ரெழுத்துளே
அஞ்சுநாலு மூன்றதாகி யும்முளே யடங்கினால்
அஞ்சுமோ ரெழுத்ததா யமைந்ததே சிவாயமே. 299

அக்கரந்த வக்கரத்தி லுட்கரந்த வக்கரம்
சக்கரத்து சிவ்வையுண்டு கம்புளத் திருந்ததும்
எட்கரந்த வெண்ணெய்போ லெவ்வெழுத்து மெம்பிரான்
உட்கரந்து நின்றநேர்மை யாவர்காண வல்லரோ. 300

ஆகமத்தி னுட்பொரு ளகண்டமூல மாதலால்
ஏகபோக மன்றியே தரித்தகற் பரமுநீ
ஏகமாதய் வைத்தனை யுணர்த்துமஞ் செழுத்துளே
ஏகபோக மாகியே யிருந்ததே சிவாயமே. 301

மூலவாசல் மீதுளே முச்சதுர மாகியே
நாலுவாச லெண்விரல் நடுவுதித்த மந்திரம்

கோலமொன்று மஞ்சுமாகு மிங்கலைந்து நின்றநீ
வேறுவேறு கண்டிலேன் விளைந்ததே சிவாயமே. 302

சுக்கிலத் திடியுளே சுழித்ததோ ரெழுத்துளே
அக்கரத் திடியுளே யமர்ந்தவாதி சோதிநீ
உக்கரத் தடியுளே யுணர்ந்தவஞ் செழுத்துளே
அக்கரம தாகியே யமர்ந்ததே சிவாயமே. 303

குண்டலத்து ளேயுளே குறித்தகத்து நாயகன்
கண்டவந்த மண்டலங் கருத்தழித்த கூத்தனை
விண்டலர்ந்த சந்திரன் விளங்குகின்ற மெய்ப்பொருள்
கண்டுகொண்ட மண்டலஞ் சிவாயமல்ல தில்லையே.

சுற்றுமைந்து கூடமென்று சொல்லிறந்த தோர்வெளி
சத்தியுஞ் சிவனுமாக நின்றதன்மை யோர்கிலீர்
சத்தியாவ தும்முடல் தயங்குசீவ னுட்சிவம்
பித்தர்கா ளறிந்திலீர் பிரானிருந்த கோலமே. 305

மூலமென்ற மந்திர முளைத்தவஞ் செழுத்துளே
நாலுவேத நாவுளே நவின்றஞான மெய்யுளே
ஆலமுண்ட கண்டனு மரியயனு மாதலால்
ஓலமென்ற மந்திரஞ் சிவாயமல்ல தில்லையே. 306

தத்துவங்க ளென்றுநீர் தமைக்கடிந்து போவீர்காள்
தத்துவஞ் சிவமதாகில் தற்பரமு நீரல்லோ
முத்திசீவ னாதமே மூலபாதம் வைத்தபின்
அத்தனுரு மும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே.

மூன்றுபத்து மூன்றையு மூன்றுசொன்ன மூலனே
தோன்றுசேர ஞானிகாள் துய்யபாத மென்றலை
என்றவைத்த வைத்தபின் னியம்புமஞ் செழுத்தையும்
தோன்றவோத வல்லிரேல் துய்யசோதி காணுமே.

உப்பர்வான கத்தினு மூலகபார மேழினும்
நம்பர்நாடு தன்னினு நாவலென்ற தீவினும்
செப்பொன்மாட மல்குதில்லை யம்பலத்து ளாடுவான்
எம்பிரான லாதுதெய்வ மில்லையில்லை யில்லையே. 309

பூவிலாய வைந்துமாய் புனலில்நின்ற நான்குமாய்
தீயிலாய மூன்றுமாய் சிறந்தகா லிரண்டுமாய்
வேயிலாய தொன்றுமாய் வேறுவேறு தன்மையாய்
நீயலாமல் நின்றநேர்மை யாவர்காண வல்லரே. 310

அந்தரத்தி லொன்றுமா யசைவுகா லிரண்டுமாய்
செந்தழலில் மூன்றுமாய்ச் சிறந்தவப்பு நான்குமாய்
ஐந்துபாரி லைந்துமா யமர்ந்திருந்த நாதனை
சிந்தையிற் றெளிந்தமாயை யாவர்காண வல்லரே. 311

மனவிகார மற்றுநீர் மதித்திருக்க வல்லிரேல்
நினைவிலாத மணிவிளக்கு நித்தமாகி நின்றிடும்
அனைவரோதும் வேதமு மகப்பிதற்ற வேணுமேற்
கனவுகண்ட துண்மைநீர் தெளிந்ததே சிவாயமே. 312

இட்டகுண்ட மேதடா விருக்குவேத மேதடா
சட்டமட் கலத்திலே சுற்றுநூல்க ளேதடா
முட்டிநின்ற தூணிலே முளைத்தெழுந்த சோதியை
பற்றிநின்ற தேதடா பட்டநாத பட்டரே. 313

நீரிலே முளைத்தெழுந்த தாமரையி னேரிலை
நீரினோடு கூடிநின்று நீரிலாத வாறுபோல்
பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப் பராபரம்
பாரினோடு கூடிநின்ற பண்புகண் டிருப்பிரே. 314

உறங்கிலென் விழிக்கிலென் னுணர்வுசென் றொடுங்கிலென்
சிறந்தவைம் புலன்களுஞ் திசைத்திசைக ளொன்றிலென்
புறம்புமுள்ளு மெங்கணும் பொருந்திருந்த தேகமாய்
நிறைந்திருந்த ஞானிகாள் நினைப்பதேது மில்லையே.

ஓதுவார்க ளோதுகின்ற வோரெழுத்து மொன்றதே
வேதமென்ற தேகமாய் விளம்புகின்ற தன்றிது
நாதமொன்று நான்முகன் மாலுநானு மொன்றதே
ஏதுமன்றி நின்றதொன்றை யாருணர்ந்த நேர்மையே

பொங்கியே தரித்தவச்சு புண்டரீக வெளியிலே
தங்கியே தரித்தபோது தாதுமா துளையதாம்

அங்கியுட் சரித்தபோது வடிவுக ளொளியுமாய்க்
கொம்புமேல் வடிவுகொண்டு குருவிருந்த கோலமே.

மண்ணுளோரும் விண்ணுளோரும் வந்தவாற தெங்ஙெனில்
கண்ணினோடு சோதிபோற் கலந்தநாத விந்துவும்
அண்ணலோடு சத்தியு மஞ்சுபஞ்சு பூதமும்
பண்ணினோடு கொடுத்தழிப் பாரெடேழு மின்றுமே.

ஒடுக்குகின்ற சோதியு முந்திநின்ற வொருவனும்
நடுத்தலத்தி லொருவனும் நடந்துகாலி லேறியே
விடுத்துநின்றவிருவரோடு மெய்யினோடு பொய்யுமாய்
அடுத்துநின் றறியினோ வறுதிநின்ற வாதியே. 319

உதித்தமந் திரத்தினு மொடுங்குமக் கரத்தினும்
மதித்தமண் டலத்தினு மறைந்துநின்ற சோதிநீ
மதித்தமண் டலத்துளே மரித்துநீ ரிருந்தபின்
சிரித்தமண் டலத்துளே சிறந்ததே சிவாயமே. 320

திருத்திவைத்த சற்குருவைச் சீர்பெற வணங்கிலீர்
குருக்கொடுக்கும் பித்தரே கொண்டுநீந்த வல்லிரோ
குருக்கொடுக்கும் பித்தருங் குருக்கொள்வந்தசீடனும்
பருத்திபட்ட பாடுதான் பன்னிரண்டும் பட்டதே.

விழித்தகண் துதிக்கவும் விந்துநாத வோசையும்
மேருவுங் கடந்தவண்ட கோளமுங் கடந்துபோய்
எழுத்தெலா மறிந்துவிட்ட விந்திரஞால வெளியிலே
* யானுநீயு மேகலந்த தென்னதொன்மை யீசனே.

ஓம்நமாவென் றுளே போதுகின்ற யோகியே
பானுடற் கருத்துளே பாவையென் றறிந்தபின்
நானுநீயு முண்டடா நலங்குலம துண்டடா
ஊனுமூனு மொன்றுமே யுணர்ந்திடா யெனக்குளே

ஐம்புலனை வென்றவர்க் கன்னதான மீவதாய்
நன்புலன்க ளாகிநின்ற நாதருக்க தேறுமோ

* இருளைவெல்பவர்களுக் கெழுபிறப்பு மில்லையே.

ஐம்புலனை வென்றிடா தவத்தமே யுழன்றிடும்
வம்பருக்கு மீவதுங் கொடுப்பது மவத்தமே. 324

ஆதியான வைம்புலன்க ளவையுமொக்கு மொக்குமோ
யோனியிற் பிறந்திருந்த துன்பமிக்கு மொக்குமோ
வீணர்காள் பிதற்றுவீர் மெய்ம்மையே யுணர்திரேல்
ஊனுறக்க போகமு முமக்கெனக்கு மொக்குமே. 325

ஓடுகின்ற வைம்புல னொடுங்கவஞ் செழுத்துளே
நாடுகின்ற நான்மறை நவிலுகின்ற ஞானிகாள்
கூடுகின்ற கண்டித குணங்கள்மூன் றெழுத்துளே
ஆடுகின்ற பாவையா யமைந்ததே சிவாயமே. 26

புவன சக்கரத்துளே பூதநாத வெளியிலே
பொங்குதீப வங்கியுள் பொதிந்தெழுந்த வாயுவைத்
தவனசோம ரிருவருந் தாமியங்கும் வாசலில்
தண்டுமாறி யேறிநின்ற சரசமான வெளியிலே.

மவுனவஞ் செழுத்திலே வாசியேறி மெள்ளவே
வானளாய் நிறைந்தசோதி மண்டலம் புகுந்தபின்
அவனுமாறு மெய்கலந் தனுபவித்த வழியிலே
அவனுமுண்டு நானுமில்லை யாருமில்லை யானதே. 328

வாளுறையில் வாளடக்கம் வாயுரையில் வாய்வடக்கம்
ஆளுறையில் ஆளடக்கம் அருமையென்ன வித்தைகாண்
தாளுறையில் தாளடக்கம் தன்மையான தன்மையும்
நாளுறையில் நாளடக்கம் நானுநீயுங் கண்டதே. 329

வழுத்திடா னழித்திடான் மாயரூப மாகிடான்
கழன்றிடான் வெகுண்டிடான் காலகாலகாலமும்
துவண்டிடா னசைந்திடான் றூயதூப மாகிடான்
சுவன்றிடா னுரைத்திடான் சூக்ஷசூக்ஷசூக்ஷமே.

ஆகிகூவென்றே யுரைத்தவக்ஷரத்தி ஞானங்கம்
யோகியோகி யெனபர்கோடி யுற்றறிந்து கண்டிடார்
பூசமாய் மனக்குரங்கு பொங்குமங்கு மிங்குமாய்
ஏகமேகமாகவே யிருப்பர்கோடிகோடியே. 331

கோடிகோடி கோடிகோடி குவலயத்தோராதியை
நாடிநாடி நாடிநாடி நாளகன்றுவீணதாய்
தேடிதேடி தேடிதேடி தேகமுங்கசங்கியே
கூடிகூடி கூடிகூடி நிற்பர்கோடி கோடியே. 332

கருத்திலான் வெளுத்திலான் பரனிருந்தகாரணம்
இருத்திலா னொளித்திலா னென்றும்ரண்டுமாகிலான்
ஒருத்திலான் மரித்திலா னொழிந்திடா னழிந்திடான்
கருத்திற்கீயுங்கூ வுமுற்றோன் கண்டறிந்தவாதியே.

வாதிவாதி வாதிவாதி வண்டலையறிந்திடான்
ஊதியூதி யூதியூதி யொளிமழுங்கி யுளறுவான்
வீதிவீதி வீதிவீதி விடைபெருப் புரக்குவோன்
சாதிசாதி சாதிசாதி சாகரத்தைக் கண்டிடான். 334

ஆண்மையாண்மையாண்மை ஆண்மைகூறுமசடரே
காண்மையான வாதிருபம் காலகால காலமும்
பாண்மையாகி மோனமான பாசமாகி நின்றிடும்
நாண்மையான நரலைவாயில் நங்குமிங்கு மங்குமே.

மிங்குமென்ற வட்சரத்தின் மீடுவாகி கூவுடன்
துங்கமாகச் சோமனோடு சோமன்மாறி நின்றிடும்
அங்கமா முனைச்சுழியி லாகுமேக வாகையாய்
கங்குலற்றுக் கிபானமுற்று காணுவாய் கடரொளி.

கடரெழும்புஞ் சூட்சமுஞ் சுழிமுனையின் சூட்சமும்
அடரெழும்பி யேகமாக வமர்ந்துநின்ற சூட்சமுந்
திடரதான சூட்சமுந் திரியின்வாலை சூட்சமுங்
கடலெழும்பு சூட்சந்தன்னைக் கண்டறிந்தான் ஞானியே.

ஞானிஞானி யென்றுரைத்த நாய்கள்கோடி கோடியே
வானிலாத மழைநாளென்ற வாதிகோடி கோடியே
தானிலான சாகரத்தின் தன்மைகாணு மூடர்கள்
மூனிலாமற் கோடிகோடி முன்னறிந்ததென்பரோ.

சூக்ஷமான கொம்பிலே சுளிமுனைச் சுடரிலே
வீச்சமான வீதியிலே விபுலைதங்கும் வாயிலே

கூச்சமான கொம்பிலே குடியிருந்த கோவிலே
தீக்ஷயான தீவிலே சிறந்ததே சிவாயமே. 339

பொங்கிநின்ற மோனமும் பொதிந்துநின்றமோனமுந்
தங்கிநின்ற மோனமுந் தயங்கிநின்ற மோளமுங்
கங்கையான மோனமுங் கதித்துநின்ற மோனமுந்
திங்களான மோனமுஞ் சிவனிருந்த மோனமே. 340

மோனமான வீதியில் முனைச்சுழியில் வாலையில்
பானமான வீதியில் பசிந்தசெஞ் சுடரிலே
ஞான்மான மூலையில் நாலைதங்கும் வாயலில்
ஓனமான செஞ்சுட ருதித்ததே சிவாயமே. 341

உதித்தெழுந்த வாலையு முயங்கிநின்ற வாலையுங்
கதித்தெழுந்த வாலையுங் காலையான வாலையும்
மதித்தெழுந்த வாலையு மறைந்துநின்ற ஞானமுங்
கொதித்தெழுந்து கும்பலாகி ஹ•வுங்ஹீயு மானதே.

கூவுங்கியு மோனமாகி கொள்கையான கொள்கையை
மூவுலே யுதித்தெழுந்த முச்சுடர் விரிவிலே
பூவிலே நறைகள்போற் பொருந்திநின்ற பூரணம்
ஆவியாவி யாவியாவி யன்பருள்ள முற்றதே. 343

ஆண்மைகூறு மாந்தரோ அருக்கனோடும் வீதியைக்
காண்மையாகக் காண்பிரோ கசடறுக்க வல்லிரோ
தூண்மையான வாதிருட்சஞ் சோபமாகுமாகுமே
நாண்மையான வாயலில் நடிந்துநின்ற நாதமே. 344

நாதமான வாயலில் நடிந்துநின்ற சாயலில்
வேதமான வீதியில் விரிந்தமுச் சுடரிலே
கீதமான ஹீயிலே கிளர்ந்து நின்ற கூவிலே
பூதமான வாயலைப் புகலறிவ ஞூதியே. 345

ஆவியாவி யாவியாவி ஐந்துகொம்பி ஞவியே
மேவிமேவி மேவிமேவி மேதினியின் மானிடர்
வாவிவாவி வாவிவாவி வண்டடற்க வறிந்திடார்
பாவிபாவி பாவிபாவி படியிலுற்ற மாந்தரோ. 346

வித்திலே முளைத்தசோதி வில்வளைவின் மத்தியில்
உத்திலே யொளிவதாகி யோனமான தீபமே
நத்திலோதி ரட்சிபோன்ற நாதனை யறிந்திடார்
வத்திலே கிடந்துழன்ற வாலையான சூட்சமே. 347

வாலையோடு காலையும் வடிந்துபொங்கு மோனமே
மாலையோடு காலையான வாறறிந்த மாந்தரே
மூலையான கோணமின் முளைத்தெழுந்தசெஞ்சுடர்
தாலையோடு பானகன்று தங்கிநின்ற மோனமே. 348

மோனமான வீதியில் முடிகினின்ற நாதமே
ஈனமின்றி வேகமான வேகமென்ன வேகமே
கானமான மூலையிற் கனிந்திருந்த வாலையில்
ஞானமான செஞ்சுடர் நடந்ததே சிவாயமே. 349

உச்சிமத்தி வீதியி லொழிந்திருந்த சாதியிற்
பச்சியுற்ற சோமனும் பரந்துநின் றுலவவே
செச்சியான தீபமே தியானமான மோனமே
கச்சியான மோனமே கடந்ததே சிவாயமே. 350

அஞ்சுகொம்பி னின்றநாத மாலைபோ லெழும்பியே
பிஞ்சிலேடு பூமலர்ந்து பெற்றியுற்ற சுத்தமே
செஞ்சுட ருதித்தபோது தேசிகன் சுழன்றுடன்
பஞ்சபூத மானதே பறந்துநின்ற மோனமே. 351

சடுதியான கொம்பிலே தத்துவத்தின் வீயிலே
அடுதியான ஆவிலே யரனிருந்த வறவிலே
இடுதியென்ற சோலையி லிருந்தழுச் சுடரிலே
நடுதியென்று நாதமோடி நன்குழவ மைந்ததே. 352

அமையுமால மோனமு மரனிருந்த மோனமும்
சமையும்பூத மோனமுந் தரித்திருந்த மோனமும்
இமையுங்கொண்ட வேகமு மிலங்குமுச்சி மோனமும்
தமையறிந்த மாந்தரே சடத்தையுற்று நோக்கிலார்.

பாச்சலூர் வழியிலே பரனிருந்த சுழியிலே
காய்ச்சகொம்பி னுனியிலே கனியிருந்த மலையிலே

வீச்சமான தேதடா விரிவுதங்கு மிக்குமே
மூச்சினோடு மூச்சைவாங்கு முட்டிநின்ற சோதியே.

சோதிசோதி யென்றுநாடித் தோற்பவர் சிலவரே
ஆதிஆதி யென்றுநாடு மாடவர் சிலவரே
வாதிவாதி யென்றுசொல்லும் வம்பருஞ் சிலவரே
நீதிநீதி நீதிநீதி நின்றிடு முழுச்சுடர். 355

சுடரதா யெழும்பியங்கு தூபமான காலயே
இடரதாய்ப் புவியும்விண்ணு மேகமா யமைக்குமுன்
படரதாக நின்றவாதி பஞ்சபூத மாகியே
அடரதாக அண்டமெங்கு மாண்மையாக நின்றதே.

நின்றிருந்த சோதியை நிலத்திலுற்ற மானிடர்
கண்டறிந்து கண்குளிர்ந்து காதலுற் றுலாவுவோர்
கண்டமுற்றமேன்முனையின் காட்சிதன்னைக்காணுவார்
நன்றியற்று ஈரலைபொங்கி நாதமு மகிழ்ந்திடும். 357

வயங்குமோனச் செஞ்சுடர் வடிந்தசோதி நாதமுங்
கயங்கள்போலக் கதறியே கருவூரற்ற வெளியிலே
பயங்கொடின்றியின்றியே படர்ந்துநின்றபான்மையே
நயங்கள்கோவென் றேநடுங்கி நங்கையான தீபமே.

தீபவுச்ச முனையிலே திவாகரத்தின் சுழியிலே
கோபமாறு கூவிலே கொதித்துநின்ற தீயிலே
தாபமான மூலையிற் சமைந்துநின்ற சூக்ஷமுஞ்
சாபமான மோட்சமுந் தடிர்ந்துநின் றிலங்குமே 359

தேசிகன் சுழன்றதே திரிமுனையின் வாலையில்
வேசமோடு வாலையில் வியளிருந்த மூலையில்
நேசசந்தி ரோதைய நிறைந்திருந்த வாரமில்
வீசிவீசி நின்றதே விரிந்துநின்ற மோனமே. 360

உட்கமல மோனமி லுயங்கிநின்ற நந்தியை
விக்கலோடு தீயுமாகி வில்வளைவின் மத்தியில்
முட்பொதிந்த தென்னவே முடிகிநின்ற செஞ்சுடர்
கட்குவைகள் போலவுங் கடிந்துநின்ற காட்சியே. 361

உந்தியிற் சுழிவழியி லுச்சியுற்ற மத்தியிற்
சந்திரனொளி கிரணந் தாண்டிநின்ற செஞ்சுடர்
பந்தமாக வில்வளையிற் பஞ்சபூத விஞ்சையாங்
கிந்துபோற் கீயில்நின்று கீச்சுமூச்சு வென்றதே. 362

செச்சையென்ற மூச்சினோடு சிகாரமும் வகாரமும்
பச்சையாகி நின்றதே பரவெளியின் பான்மையே
இச்சையான ஹம்ஸவிலே யிருந்தெழுந்த ஹ்ரீயிலே
உச்சியான கோணத்தி லுதித்ததே சிவாயமே. 363

ஆறுமூலைக் கோணத்தி லமைந்தவொன்ப தாத்திலே
நாறுமென்று நங்கையான நாவியுந் தெரித்திட
கூறுமென்று ஐவரங்கு கொண்டுநின்ற மோனமே
பாறுகொண்டு நின்றது பறந்ததே சிவாயமே. 364

பறந்ததே கறந்தபோது பாச்சலூர் வழியிலே
பிறந்ததே பிராணனன்றிப் பெண்ணுமாணு மல்லவே
துறந்ததோ சிறந்ததோ தூயதுங்க மானதோ
இறந்தபோதி லன்றிசு இலங்கிடுஞ் சிவாயமே. 365

அருளிருந்த வெளியிலே அருக்கனின்ற விருளிலே
பொருளிருந்த சுழியிலே புரண்டெழுந்த வழியிலே
தெருளிருந்த கலையிலே தியங்கிநின்ற வலையிலே
குருவிருந்த வழியினின்று ஹம்ஸவும்ஹ்ரீயுமானதே. 366

ஆனதோ ரெழுத்திலே யமைந்துநின்ற வாதியே
கானமோடு தாலமீதிற் கண்டறிவ தில்லையே
காணுந்தானு மானதே சமைந்தவாலை காலையில்
வேணுலோடும் வாறுபோல் விரிந்ததே சிவாயமே. 367

ஆறுகொண்ட வாரியு மமைந்துநின்ற தெய்வமுந்
தூறுகொண்ட மாரியுந் துலங்கிநின்ற தூபமும்
வீறுகொண்ட மோனமும் விளங்குமுட் கமலமும்
மாறுகொண்ட ஊவிலே மடிந்ததே சிவாயமே. 368

வாயல்கண்ட கோணமில் வயங்குண்மவர் வைகியே
சாயல்கண்டு சார்ந்ததுந் தலைமன்னு ருறைந்ததும்

காயவண்டு கண்டதுங் கருவூரங்கு சென்றதும்
பாயுமென்று சென்றதும் பறந்ததே சிவாயமே. 369

பறந்ததே துறந்தபோது பாச்சலூர் வழியிலே
மறந்ததே கவ்வுமுற்ற வாணர்கையின் மேவியே
பிறந்ததே யிறந்தபோதிற் பீடிடாமற் கீழிலே
சிறந்துநின்ற மோனமே தெளிந்ததே சிவாயமே. 370

வடிவுபற்ப வாசனத் திருத்திமூல வனலையே
மாருதத்தி னலெழுப்பி வாசலைந்து நாலையு
முடிவுமூத்தி ணாப்படுத்தி மூலவீணை தண்டினல்
முளரியால யங்கடந்து மூலநாடி யூடுபோய்
அடிதுவக்கி முடியளவு மாறுமா நிலங்கடந்
தப்புறத்தில் வெளிகடந்த வாதியெங்கள் சோதியை
யுடுபதிக்க ணமுதருந்தி யுண்மைஞான வுவகையுள்
உச்சிபட் டிறங்குகின்ற யோகிநல்ல யோகியே. 371

மந்திரங்க ளுண்டுநீர் மயங்குகின்ற மானிடர்
மந்திரங்க ளாவது மரத்திலூற லன்றுகாண்
மந்திரங்க ளாவது மதித்தெழுந்த வாயுவை
மந்திரத்தை யுண்டவர்க்கு மரணமேதுமில்லையே. 372

மந்திரங்கள் கற்றுநீர் மயங்குகின்ற மாந்தரே
மந்திரங்கள் கற்றநீர் மரித்தபோது சொல்விரோ
மந்திரங்க ளும்முளே மதித்தநீரு மும்முளே
மந்திரங்க ளாவது மனத்தினைந் தெழுத்துமே. 373

உள்ளதோ பிறப்பதோ வுயிரொடுங்கி நின்றிடம்
மெள்ளவந்து கிட்டிநீர் வினவவேண்டு மென்கிறீர்
உள்ளதும் பிறப்பது மொத்தபோது நாதமாங்
கள்ளவாச லைத்திறந்து காணவேண்டு மாந்தரே. 374

ஓரெழுத்தி லிங்கமா யோதுமட் சரத்துளே
ஓரெழுத்தி யங்குகின்ற வுண்மையை யறிகிலீர்
மூவெழுத்து மூவராய் முளைத்தெழுந்த சோதியை
நாவெழுத்து நாவுளே நவின்றதே சிவாயமே. 375

முத்திசித்தி தொந்தமா முயக்குகின்ற மூர்த்தியை
மற்றுதித்த வப்புனல்க ளாகுமத்தி மப்புலன்
அத்தர்நித்தர் காளகண்ட ரன்பினு லநுதினம்
உச்சரித் துளத்திலே யறிந்துணர்ந்து கொண்மினே.

மூன்றிரண்டு மைந்துமாய் முயன்றெழுந்த தேவராய்
மூன்றிரண்டு மைந்ததாய் முயன்றதே யுலகெலாம்
ஈன்றதாயு மப்பனு மியங்குகின்ற நாதமாய்
தோன்றுமோரெழுத்தினேடுசொல்லலொன் றுமில்லையே

வெளியுருக்கி யஞ்செழுத்து விந்துநாத சத்தமுந்
தளியுருக்கி நெய்கலந்து சகலசத்தி யானதும்
வெளியிலு மவ்வினையிலு மிருவரை யறிந்தபின்
வெளிகலந்த தன்மையால் தெளிந்ததேசிவாயமே. 378

முப்புறத்தி லப்புறம் முக்கணன் வினையிலே
சிற்பரத்து ளுற்பனஞ் சிவாயமஞ் செழுத்துமாந்
தற்பர முதித்துநின்று தானுவெங்கு மானபி
னிப்புற மொடுங்குமோடி யெங்குமிலிங்கமானதே. 379

ஆடிநின்ற சீவனே ரஞ்சுபஞ்ச பூதமோ
கூடிநின்ற சோதியோ குலாவிநின்ற மூலமோ
நாடிகண்டு நின்றதோ நாவுகற்ற கல்வியோ
வீடுகண்டு விண்டிடின் வெட்டவெளியு மானதே. 380

உருத்தரித்த போதுசீவ னுக்கநின்ற வுண்மையுந்
திருத்தமுள்ள தொன்றிலுஞ் சிவாயமஞ்செழுத்துமா
மிருத்துநின் றுறுத்தடக்கி யேகபோக மானபின்
கருத்தினின் றுதித்ததே கபாலமேந்து நாதனே. 381

கருத்தரித் துதித்தபோது கமலபீட மானதுங்
கருத்தரித் துதித்தபோது காரணங்க ளானதுங்
கருத்தரித் துதித்தபோது கரணமிரண்டு கண்களாய்
கருத்தினின் றுதித்ததே கபாலமேந்து நாதனே. 382

ஆனவன்னி மூன்றுகோண மாறிரண்டு எட்டிலே
யான்சிவ னஞ்செழுத் தகாரமிட் டலர்ந்தது

மாளசோதி யுண்மையு மனாதியான வுண்மையு
மானதான தானதா யவலமாய் மறைந்திடும். 383

ஈன்றெழுந்த வெம்பிரான் திருவரங்க வெளியிலே
நான்றபாம்பின் வாயினால் நாலுதிக்கு மாயினான்
மூன்றுமூன்று வளையமாய் முப்புரங் கடந்தபின்
னீன்றெழுந்த அவ்வினாசை யெங்குமாகி நின்றதே.

எங்குமெங்குமொன்றலோ வீரேழ்லோகமொன்றலோ
அங்குமிங்கு மொன்றலோ வனாதியான தொன்றலோ
தங்குதா பரங்களுந் தரித்துவார தொன்றலோ
உங்களெங்கள் பங்கினி லுதித்ததே சிவாயமே. 385

அம்பரத்தி லாடுஞ்சோதி யானவன்னி மூலமா
மம்பரமுந் தம்பரமு மகோரமிட் டலர்ந்தது
மம்பரக் குளியிலே யங்கமிட் டுருக்கிட
வம்பரத்தி லாதியோ டமர்ந்ததே சிவாயமே. 386

வாடிலாத பூமலர்ந்து வண்டுரிசை நாவிலே
யோடிநின் றுருவெடுத் துகாரமா யலர்ந்தது
மாடியாடி யங்கமு மகப்படக் கடந்தபின்
கூடிநின் றுலாவுமே குருவிருந்த கோலமே. 387

விட்டடி விரைத்ததோ வேருருக்கி நின்றதோ
எட்டிநின்ற சீவனு மீரேழ்லோகங் கண்டதோ
தட்டுருவ மாகிநின்ற சதாசிவத் தொளியதோ
வட்டவீ டறிந்தபேர்கள் வானதேவ ராவரே. 383

வானவர் நிறைந்தசோதி மானிடக் கருவிலே
வானதேவ ரத்தனைக்குள் வந்தடைவர் வானவர்
வானகமு மண்ணகமும் வட்டவீ டறிந்தபின்
வானெலா நிறைந்துமன்னு மாணிக்கங்க ளானதே.

பன்னிரண்டு கால்நிறுத்திப் பஞ்சவர்ண முற்றிடின்
பின்னியே வெளிக்குணின்று வேறிடத் தமர்ந்ததுஞ்
சென்னியாந் தலத்திலே சீவனின் றியங்கிடும்
பன்னியுன்னி யாய்ந்தவர் பரப்பிரம மானதே. 390

உச்சிகண்டு கண்கள்கட்டி யுண்மைகண்ட தெவ்விடம்
மச்சுமாளி கைக்குளே மாளிடங் கலப்பிரேல்
எச்சிலான வாசல்களு மேகபோக மாய்விடும்
பச்சைமாலு மீசனும் பரந்ததே சிவாயமே. 391

வாயிலிட்டு நல்லுரிசை யட்சரத் தொளியிலே
கோயிட்டு வாவியுமங் கொம்பிலே யுலர்ந்தது
மாயிலிட்ட காயமு மனுதியிட்ட சீவனும்
வாயுவிட்ட வன்னியும் வளர்ந்ததே சிவாயமே. 392

அட்சரத்தை யுச்சரித் தனுதியங்கி மூலமா
யட்சரத்தை யுந்திறந்த கோரமிட் டலர்ந்தது
மட்சரத்தி லுட்கர மகப்படக் கடந்தபின்
அட்சரத்தி லாதியோ டமர்ந்ததே சிவாயமே. 393

கோயிலுங் குளங்களுங் குளியினிற் குருக்களாய்
மாயிலு மடியிலு மனத்திலே மயங்குறீர்
ஆயனை யரனையு மறிந்துணர்ந்து கொள்வீரேல்
தாயினுந் தகப்பனோடு தானமர்ந்த தொக்குமே. 394

கோயிலெங்குமொன்றலோ குளங்கணீர்களொன்றலோ
தேயுவாயு வொன்றலோ சிவனுமங்கே யொன்றலோ
ஆயசீவ னெங்குமா யமர்ந்துவார தொன்றலோ
காயமீ தறிந்தபேர்கள் காட்சியாவர் காணுமே. 395

காதுகண்கள் மூக்குவாய் கலந்துவார தொன்றலோ
சோதியிட் டெடுத்ததுஞ் சுகங்களஞ்சு மொன்றலோ
ஓதிவைத்த சாத்திர முதித்துவார தொன்றலோ
நாதவீ டறிந்தபேர்க ளுதராவர் காணுமே. 396

அவ்வுதித்த வட்சரத்தி னுட்கலந்த வட்சரம்
சவ்வுதித்த மந்திரஞ் சம்புளத் திருந்ததால்
மவ்வுதித்த மாய்கையால் மயங்குகின்ற மாந்தர்காள்
உவ்வுதித்த தவ்வுமா யுருத்தரித்த வுண்மையே. 397

அகாரமென்னு மக்கரத்தி லக்கர மெழுந்ததோ
அகாரமென்னு மக்கரத்தி லவ்வுவந் துதித்ததோ

உகாரமு மகாரமு மொன்றி நன்றுநின்றதோ
விகாரமற்ற ஞானிகாள் விரித்துரைக்கவேணுமே 398

சத்தியாவ துன்னுடல் தயங்குசீவ னுட்சிவம்
பித்தர்கா ளிதற்குமேல் பிதற்றுகின்ற தில்லையே
சுத்தியைந்து கூடமொன்று சொல்லிறந்ததோர்வெளி
சத்திசிவமு மாகிநின்று தண்மையாவ துண்மையே.

சுக்கிலத் துளையிலே சுரோணிதக் கருவுளே
முச்சதுர வாசலில் முளைத்தெழுந்த மோட்டினில்
மெய்ச்சதுர மெய்யுளே விளங்கு ஞானதீபமா
யுச்சரிக்கு மந்திரம் ஓம்நமசி வாயமே. 400

அக்கர மனாதியல்ல வாத்தும மனாதியல்ல
புக்கிருந்த பூதமும் புலன்களு மனாதியல்ல
தக்கமிக்க நூல்களுஞ் சாஸ்திர மனாதியல்ல
வொக்கநின் றுடன்கலந்த வுண்மை காணனாதியே.

மென்மையாகி நின்றதேது விட்டுநின்றுதொட்டதேது
வுண்மையாக நீயுரைக்க வேணு மெங்களுத்தமா
பெண்மையாகி நின்றதொன்றுவிட்டுநின்றதொட்டதை
யுண்மையா யுரைக்கமுத்தி யுட்சலத் திருந்ததே. 402

அடக்கினு லடங்குமோ வண்டமஞ் செழுத்துளே
யுடக்கினு லெடுத்தகாய முண்மையென் றுணர்ந்துநீ
சடக்கிலாறு வேதமுந் தரிக்கவோதி லாமையால்
விடக்குநாயு மாயவோதி வேறுவேறு பேசுமோ 403

உண்மையான சக்கர முபாயமா யிருந்ததுந்
தண்மையான காயமுந் தரித்தரூப மானதும்
வெண்மையாகி நீறியே விளைந்து நின்றதானது
முண்மையான ஞானிகள் விரித்துரைக்க வேண்டுமே.

எள்ளகத்தி லெண்ணெய்போல வெங்குமாகியெம்பிரா
னுள்ளகத்தி லேயிருக்க வூசலாடு மூடர்காள்
கொள்ளைபட்ட வாவினைக் குணக்கெடுக்க வல்லிரேல்
வள்ளலாகி நின்றசோதி காணலாகு மெய்ம்மையே.

வேணுமென்ற ஞானமும் விரும்புகின்ற நூலிலே
தாணுவுண்டங் கென்கிறீர் தரிக்கிலீர் மறக்கிலீர்
தாணுவொன்று மூலநாடி தன்னுள்நாடி யும்முளே
காணுமன்றி வேறியாவுங் கனுமயக்க மொக்குமே. 406

வழக்கிலே யுரைக்கிறீர் மனத்துளே தவிக்கிறீர்
உழக்கிலாது நாழியான வாறுபோலு மூமைகாள்
உழக்குநாலு நாழியான வாறுபோலு மும்முளே
வழக்கிலே யுரைக்கிறீர்மனத்துளீசன் மன்னுமே 407

அறத்திறங்க ளுக்குநீ யண்டமெண் டிசைக்கும்நீ
திறத்திறங்க ளுக்குநீ தேடுவார்கள் சிந்தைநீ
யுறக்கம்நீ யுணர்வுநீ யுட்கலந்த சோதிநீ
மறக்கொணாத நின்கழல் மறப்பினுங் குடிகொளே 408

ஆடுகின்ற வெம்பிரானை யங்குமிங்கு நின்றுநீர்
தேடுகின்ற வீணர்காள் தெளிவதொன்றை யோர்கிலீர்
நாடிநாடி யும்முளே நவின்றுநோக்க வல்லிரேல்
கூடொணாத தற்பரங் குவிந்துகூட லாகுமே. 409

சுத்தியைந்து கூடமொன்று சொல்லிறந்ததோர்வெளி
சத்தியுஞ் சிவமுமாகி நின்றதன்மை யோர்கிலீர்
சத்தியாவ தும்முடல் தயங்குசீவ னுட்சிவம்
பித்தர்கா ளறிந்துகொள் பிரானிருந்த கோலமே. 410

அகாரமான தம்பலம் அனாதியான தம்பலம்
உகாரமான தம்பல முண்மையான தம்பல
மகாரமான தம்பலம் வடிவமான தம்பலஞ்
சிகாரமான தம்பலந். தெளிந்ததே சிவாயமே. 411

சக்கரம் பறந்ததோடி சக்கரமேல்பலகையாய்
செக்கிலாம லெண்ணெய்போல் சிங்குவாயு தேயுவு
முக்கிலே யொளிகலந்து யுகங்களுங் கலக்கமாய்
புக்கிலே புகுந்தபோது போனவாற தெங்ஙனே. 412

வளர்ந்தெழுந்தகொங்கைதன்னைமாயமென்றெண்ணிநீ
ரருள்கொள்சீவராருடம் புடைமையாகத்தோர்வீர்கள்

விளங்குஞான மேவியே மிக்கோர்சொல்லைக் கேட்பிரேல்
களங்கமற்று நெஞ்சுளே கருத்துவந்து புக்குமே. 413

நாலுவேத மோதுகின்ற ஞானமொன் றறிவிரோ
நாலுசாம மாகியே நவின்றஞான போதமா
யாலமுண்ட கண்டனு மயனுமந்த மாலுமாய்ச்
சாலவுன்னி நெஞ்சுளே தரித்ததே சிவாயமே. 414

சுற்றமென்று சொல்வதுஞ் சுருதிமுடிவில் வைத்திட
ரத்தகித்த மாடியே யமர்ந்திருந்த தெவ்விடம்
பத்திமுற்றி யன்பர்கள் பரத்திலொன்று பாழது
பித்தரே யிதைக்கருதி பேசலாவ தெங்ஙனே. 415

எங்ஙனே விளக்கதுக் கேற்றவாறு ளின்றுதா
னெங்ஙனே யெழுந்தருளி யீசனேச ரன்பரே
சிங்கமண்மி யானைபோலத் திரிமலங்க ளற்றதே. 416

அற்றவுள் ளகத்தையு மலக்கிடு மெழுகிடு
மெத்ததீப மிட்ட திற் பிறவாதபூசை யேத்தியே
நற்றவம் புரிந்துளக நாதர்பாதம் நாடியே
கற்றிருப்ப தேசரிதை கண்டுகொள்ளு மும்முளே.

பார்த்துநின்ற தம்பலம் பரமனாடு மம்பலங்
கூத்துநின்ற தம்பலங் கோரமான தம்பலம்
வார்த்தையான தம்பலம் வன்னியான தம்பலஞ்
சீற்றமான தம்பலந் தெளிந்ததே சிவாயமே. 418

சென்றுசென் றிடந்தொறுஞ் சிறந்தசெம்பொனம்பலம்
அன்றுமின்று நின்றதோ ரனாதியான தம்பலம்
மொன்றியொன்றி நின்றது ளொழிந்ததே சிவாயமே.

தந்தைதாய் தமருநீ சகலதேவ ரையுநீ
சிந்தைநீ தெளிவுநீ சித்திமுத்தி தானுநீ
விந்துநீ விளைவுநீ மேலதாய வேதநீ
யெந்தைநீ யிறைவனீ யென்னையாண்ட வீசனே. 420

எப்பிறப்பி லும்பிறந் திறந்தழிந்த வேழைகா
ளிப்பிறப்பி லும்பிறந்து என்னநீறு பூசுநீ

ரப்புடன் மலமறுத்து ஆசைநீக்க வல்லிரேல்
செப்புநாத வோசையிற் றெளிந்துகாணலாகுமே. 421

மந்திரங்கள் கற்றுநீர் மயங்குகின்ற மாந்தரோ
மந்திரங்கள் கற்றநீர் மரித்தபோது சொல்விரோ
மந்திரங்க ளும்முளே மதிக்கநீரு மும்முளே
மந்திரங்களாவது மனத்திலைந்தெழுத்துமே. 422

எட்டியோக மானது மியங்குகின்ற நாதமும்
மெட்டுவெக்க ரத்துளே உகாரமு மகாரமும்
விட்டவர்ந்த மந்திரம் வீணதண்டி னூடுபோ
யட்டவக்ஷரத்துளே யமர்ந்ததே சிவாயமே. 423

பிரான்பிரா னென்றுநீர் பினத்துகின்ற மூடரே
பிரானைவிட்டு மெம்பிரான் பிறிந்தவாற தெங்ஙனே
பிரானுமாய் பிரானுமாய் பேருலகு தானுமாய்
பிரானிலே முளைத்தெழுந்த பித்தர்காணு மும்முடல்.

ஆதியில்லை யந்தமில்லை யானநாலு வேதமில்லை
சோதியில்லை சொல்லுமில்லை சொல்லிறந்த தூவெளி
நீதியில்லை நேசமில்லை நிச்சயப் படாததும்
ஆதிகண்டு கொண்டபின் னஞ்செழுத்து மில்லையே.

அம்மையப்ப னப்பநீ ரமர்ந்தபோ தறிகிலீ
ரம்மைபட்ப னனநீ ராதியான பாசமே
யம்மையப்ப னின்னையன்றி யாருமில்லை யானபின்
னம்மையப்ப னின்னையன்றி யாருமில்லை யில்லையே.

நூறுகோடி மந்திரம் நூறுகோடி யாகமம்
நூறுகோடி நாளிருந் தூடாடினாலு மென்பயன்
ஆறுமாறு மாறுமா யகத்திலோ ரெழுத்ததாய்
சீறையோத வல்லிரேல் சிவபதங்கள் சேரலாம். 427

முந்தவோ ரெழுத்துளே முளைத்தெழுந்த செஞ்சுட
ரந்தவோ ரெழுத்துளே பிறந்துகாய மானது
மந்தவோ ரெழுத்துளே யேகமாகி நின்றது
மந்தவோ ரெழுத்தையு மறிந்துணர்ந்து கொள்ளுமே

கூட்டமிட்டு நீங்களுங் கூடிவேத மோதுநீர்
ஏட்டகத்து ளீசனு மிருப்பதென் னெழுத்துளே
நாட்டமுற்று நாடியே நாலுமூன்று தன்னுளே
யாட்டகத்து ளாடிடு மம்மையாளை யுண்மையே.429

காக்கைமூக்கை யானையா ரெடுத்துரைத்த காரணம்
காக்கையூன்றி யுள்வளைத்து ஞானநாடி யூடுபோ
யேக்கைநோக்க வட்சர மிரண்டெழுத்து யேத்திடிற்
பார்த்தபார்த்த திக்கெலாம் பரப்பிரம மானதே. 430

கொள்ளொணாது குவிக்கொணாது கோதறக் குலைக்கொணாது
அள்ளொணாது வணுகொணாது வாதிமூல மானதைத்
தெள்ளொணாதுதெளியொணாதுசிற்பரத்தினுட்பயன்
விள்ளொணாத பொருளையான் விளம்புமாறதெங்ஙனே.

ஓசையுள்ள கல்லைநீ ருடைத்திரண்டாய் செய்துமே
வாசலிற் பதித்தகல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்கு வைத்தகல்லில் பூவும்நீருஞ் சாத்துநீர்
ஈசனுக் குகந்தகல் லெந்தக்கல்லு சொல்லுமே. 432

ஒட்டுவைத்து கட்டிநீ ருபாயமான மந்திரங்
கட்டுபட்ட போதிலுங் கர்த்தனங்கு வாழுமோ
எட்டுமெட்டு மெட்டுளே யியங்குகின்ற வாயுவை
வட்டமிட்ட பவ்விலே வைத்துணர்ந்து பாருமே.433

இந்தவூரி லில்லையென்று எங்குநாடி யோடுநீ
ரந்தவூரி லீசனு மமர்ந்துவாழ்வ தெங்ஙனே
யந்தமான பொந்திலாரில் மேவிநின்ற நாதனை
யந்தமான சீயிலவ்வி லறிந்துணர்ந்து கொள்ளுமே,

புக்கிருந்த தும்முளே பூரியிட்ட தோத்திரம்
தொக்குசட்சு சிங்குவை யாக்கிராணஞ் சூழ்ந்திடி
லக்குமணி கொன்றைசூடி யம்பலத்து ளாடுவார்
மிக்கசோதி யன்புடன் விளம்பிடாது பின்னையே.435

பின்னெழுந்த மாங்கிஷத்தை பேதையர்கண்பற்றியே
பின்புமாங் கிஷத்தினுல் போகமாய்கை பண்ணினுல்

துன்புறும் வினைகள்தான் சூழ்ந்திடும்பி னென்றலோ
அன்பரா யிருந்தபேர்க ளாறுநீந்தல்போல்விடே 436

விட்டிருந் துமுளே விதனமற் றிருக்கிறீர்
கட்டிவைந்த வாசல்மூன்று காட்சியானவாசலொன்று
கட்டிவைத்த வாசலுங் கதவுதாள் திறந்துபோய்த்
திட்டமான வீசனைத் தெளியுமாங் கிஷத்துளே. 437

ஆகுமாகு மாகுமே யனுதியான வப்பொருள்
ஏகர்பாதம் நாடிநாடி யேத்திநிற்க வல்லிரேல்
பாகுசேர் மொழியுமைக்குப் பாலனாகி வாழலாம்
வாகுடனே வனனியை மருவியே வருந்திடீர். 438

உண்மையான தொன்றதொன்றை யுற்றுநோக்கி யுமுளே
வண்மையான வாசியுண்டு வாழ்த்தியேத்த வல்லிரேல்
தண்மைபெற் றிருக்கலாம் தவமும்வந்து நேரிடும்
கன்மதன்ம மாகுமீசர் காட்சிதானுங் காணுமே. 439

பாலனாக வேணுமென்று பத்திமுற்று மென்பரே
நாலுபாத மூண்டதில் நனைந்திரண் டடுத்ததால்
மூலநாடி தன்னில்வன்னி மூட்டியந்த நீருண
ஏலவார் குழலியூடே யீசர்பாத மெய்துமே. 410

எய்துமின்னை யன்பினா லிறைஞ்சியேத்த வல்லிரே
லெய்துமுண்மை தன்னிலே யிறப்பிறப் பகற்றிடும்
மையிலங்கு கண்ணிபங்கன் வாசிவானி லேறிமுன்
செய்தவல் வினைகளுஞ் சிதறுமது திண்ணமே 441

திண்ணமென்று சேதிசொன்ன செவ்வியோர்கள் கேண்மினோ
யண்ணலன் புளன்புருகி யறிந்துநோக்க லாயிடும்
மண்ணதிர விண்ணதிர வாசியை நடத்திடில்
நண்ணியெங்க ளீசனும் நமதுட லிருப்பனே. 412

இருப்பனெட்டெட் டெண்ணிலே யிருந்துவேற தாகுவன்
நெருப்புவாயு நீருமண்ணும் நீள்விசும்பு மாகுவன்
கருப்புகுந்து காலமே கலந்துசோதி நாதனைக்
குருப்புனலில் மூழ்கினார் குறித்துணர்ந்து கொள்வரே

கொள்ளுவார்கள் சிந்தையிற் குறிப்புணர்ந்தஞானிகள்
விள்ளுவார்கள் பக்குவத்தில் வேண்டிவேண்டி யேத்தினால்
உள்ளுமாய் புறம்புமா யுணர்வதம் குணர்வுமாய்த்
தெள்ளிதாக நின்றசோதி செம்மையைத்தெளிந்திடே

தெளிந்தநற்சரியைதன்னில் சென்றசாலோகம்பெறும்
தெளிந்தநற் கிரியைபூசை சேரலாஞ் சாமீபமே
தெளிந்தநல் யோகந்தன்னில் சேரலாகுஞ் சாரூபந்
தெளிந்தஞானம் நான்கிலும் சேரலாந் சாயுச்சியமே.

சேருவார்கள் ஞானமென்று செப்புவார்தெளிவுளோர்
சேருவார்கள் நாலுபாதஞ் செம்மையென்ற தில்லையே
சேருவார்கள் சிவகதி திருவருளைப் பெற்றபேர்
சேறுமாறு கண்டுநாலுஞ் செய்தொழில் திடப்படே.

திறமலிக்கு நாலுபாதஞ் செம்மையுந் திறப்படார்
அறிவிலிகள் தேசநாடி யவத்திலே யலைவதே
குறியதனைக் காட்டியுட் குறித்துநோக்க வல்லிரேல்
வெறிகமழ் சடையுடையோன் மெய்ப்பத மடைவரே.

அடைவுளோர்கள் முத்தியை யறிந்திடாத மூடரே
படையுடைய தத்துவமும் பாதகங்க ளல்லவோ
மடைதிறக்க வாரியின் மடையிலேறு மாறுபோல்
உடலில்மூல நாடியை யுயரவேத்தி யூன்றிடே. 418

ஊன்றியேத்தி மண்டல முருவிமூன்று தாள்திறந்
தான்றுதந்தி யேறிடி லமூர்தம்வந் திறங்கிடும்
நான்றிதென்று தொண்டருக்கு நாதனும்வெளிப்படு
மான்றியு முயிர்பரம் பொருந்திவாழ்வ தாகவே. 449

ஆகமூலநாடியி லனலெழுப்பி யன்புடன்
மோகமான மாயையில் முயல்வது மொழிந்திடில்
தாகமேருநாடியேக னேகமான வாறுபோ
லேகர்பாத மன்புட னிறைஞ்சினா ரறிவரே. 450

அறிந்துநோக்கி யும்முளே யயன்றியான மும்முளே
யிருந்திராம லேகர்பாதம் பெற்றிருப்ப துண்மையே.

யறிந்துமீள வைத்திடா வகையுமரண மேத்தினர்
செறிந்துமேலை வாசலைத் திறந்துபாரு மும்முளே.451

சோதியாக வும்முளே தெளிந்துநோக்க வல்லிரேல்
சோதிவந் துதித்திடுந் துரியாதீத முற்றிடு
மாதிசக் கரத்தினி லமர்ந்துதீர்த்த மாடுவன்
பேதியாது கண்டுகொள் பிராணனைத்திருத்தியே.452

திருவுமாய்சிவனுமாய் தெளிந்தவோர்கள் சிந்தையில்
மருவிலே யெழுந்துவீசும் வாசனைய தாகுவன்
கருவிலே விழுந்தெழுந்த கன்மவாத னையெலாம்
பருதிமுன் னிருளதாய் பறியுமங்கி பாருமே 453

பாருமெங்கை யீசர்வைத்த பண்பிலே யிருந்துநீர்
சேருமே நடுவறிந்து செம்மையான வப்பொருள்
வேரையும் முடியையும் விரைந்துதேடி மாலயன்
பாரிடந்து விண்ணிலே பறந்துங்கண்ட தில்லையே.

கண்டிலா தயன்மாலென்று காட்சியாகச் சொல்லுநீர்
மண்டினு லரனுடன் மேவலா யிருக்குமோ
தொண்டுமெட்டுமன்புடன் தொழுதுநோக்கவல்லிரேல்
பண்டுமுப் புரமெரித்த பத்திவந்து முற்றுமே. 455

முற்றுமேயவனொழிந்துமுன்பின்னொன் றுங்காண்கிலேன்
பற்றிலாத தொன்றுதன்னை பற்றிநிற்க வல்லது
கற்றதாலே யீசர்பாதங் காணலா யிருக்குமோ
பெற்றபேரை யன்புடன் பிரியமாகக் கேளுமே. 456

கேட்டுநின்ற வுன்னிலே கிடைத்தகா லத்துளே
வாட்டமுள்ள தத்துவ மயக்கமு மகற்றிடும்
வீட்டிலே வெளியதாகும் விளங்கவந்து நேரிடுங்
கூட்டிவன்னி மாருதங் குயத்தைவிட் டெழுப்புமே.

எழுப்பிமூல நாடியை யிதப்படுத்த லாகுமே
மழுப்பிலாத சபையை வலித்துவாங்க வல்லிரேல்
சுழுத்தியுங் கடந்துபோய் சொப்பனத்தி லப்புற
மழுத்திமீயா ரெழுத்துளே யமைப்பதுண்மை யையனே.458

அல்லதில்லை யென்றுதா னாவியும் பொருளுடல்
நல்லவீசர் தாளிணைக்கு நாதனுக்கு மீந்திலை
யென்றுளஎன்னுள் நேசமும் வாசியை வருந்தினால்
தொல்லையாம்வினைவிடென்று தூரதூரமானதே. 459

ஆனதே பதியது யரற்றதே பசுபாசம்
போனதே மலங்களும் புலன்களும் வினைகளும்
கானகத்தி லிட்டதீயிற் காற்றுவந் தடுத்தலோ
ஊனகத்தில் வாயுவன்னி யொன்றியே யுலாவுமே. 460

உலாவுமுவ்வு மவ்வுமா யுதித்தடர்ந்து நின்றது
முலாவியைம் புலன்களு மொருதலத் திருந்திடும்
நிலாவுமங்கு நேசமாகி நின்றமூர்த்த முண்டுதாங்
குலாவுமெங்க ளீசனைக் குறித்துணர்ந்து கும்பிடே.

கும்பிடுங் கருத்துளே குகனையைங் கரனையும்
நம்பியே யிடம்வலம் நமஸ்கரித்து நாடிட
வெம்பிரானு மம்மையு மிருத்தியே நடுவனைத்
தும்பிபோல வாசகந் தொடர்ந்துசோம்பி நீங்குமே.

நீங்குமைம் புலன்களும் நிறைந்தவல் வினைகளும்
ஆங்காரமா மாசையு மருந்தடர்ந்த பாவமும்
ஓங்காரத்தினுள்ளிருந்த வொன்பதொழிந்தொன்றிலத்
தாங்கவீசர் சொற்படி துணிந்திருக்க சுத்தமே. 463

நினைப்பதொன்று கண்டிலே னீயலாது வேறிலை
நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாய்கை மாய்கையே
யனைத்துமா யகண்டமா யனாதிமுன்ன னாதியாய்
நினைக்குள்நா னெனக்குள்நீ நினைக்குமாற தெங்ஙனே.

கருக்கலந்த காலமே கண்டுநின்ற காரணம்
உருக்கலந்த போதலோ வுன்னைநா னுணர்ந்தது
விரிக்கிலென் மறைக்கிலென் வினைக்கிசைந்தபோதெலா
முருக்கலந்து நின்றபோது நீயுநானு மொன்றலோ.

ஞானநூல்கள் தேடியே நவின்றஞான யோகிகாள்
ஞானமான சோதியை நாடியுள் ளறிகிலீர்

ஞானமாகி நின்றதோர் நாதனை யறிந்தபின்
ஞானமல்ல தில்லைவேறு நாமுரைத்த துண்மையே.

கருத்தரிப்ப தற்குமுன் காயம்நின்ற தெவ்விடம்
உருத்தரிப்ப தற்குமுன் னுயிர்ப்புநின்ற தெவ்விடம்
மருட்பொதிந்த சிந்தையில் மயக்கம்நின்ற தெவ்விடம்
விருப்புணர்ந்த ஞானிகாள் விரித்துரைக்கவேணுமே.

கருவினிற் கருவதா யெடுத்தவேழு தோற்றமு
மிருவினைப் பயத்தினால் பிறந்திறந் துழன்றிடும்
மறுவினைப் பிறவிமூன்று காலமும் வகுத்தபின்
உறுவினைப்பயனிதென் றுணர்ந்தஞானிசொல்லுமே.

வாயிலெச்சில் போகவே நீர்குடித்துத் துப்புவீர்
வாயிருக்க எச்சில்போன வாறதென்ன தெவ்விடம்
வாயிலெச்சி லல்லவோ நீருரைத்த மந்திரம்
நாதனை யறிந்தபோது நாடுமெச்சி லேதுசொல். 469

தொடக்கதென்று நீர்விழத் தொடங்குகின்றவூமர்காள்
தொடக்கிருந்த தெவ்விடஞ் சுத்தியான தெவ்விடம்
தொடக்கிருந்த வாறறிந்து சுத்திபண்ண வல்லிரேல்
தொடக்கிலாதசோதியைத் தொடர்ந்துகாணலாகுமே.

மேதியோடு மாவுமே விரும்பியே புணர்ந்திடில்
சாதிபேத மாயுருத் தரிக்கும்வாறு போலவே
வேதமோது வானுடன் புலைச்சிசென்று மேவிடில்
பேதமாய்ப் பிறக்கிலாத வாறதென்ன பேசுமே. 471

வகைக்குலங்கள் பேசியே வழக்குரைக்கு மாந்தர்காள்
தொகைக்குலங்க ளானநேர்மை நாடியேயுணர்ந்தபின்
மிகைத்தசுக்கில மன்றியே வேறுமொன்று கண்டிலீர்

ஓதும்நாலு வேதமு முரைத்தசாஸ் திரங்களும்
பூதத்த் துவங்களும் பொருந்துமாக மங்களும்
சாதிபேத வன்மையுந் தயங்குகின்ற நூல்களும்
பேதபேத மாகியே பிறந்துழன் றிருந்ததே. 473

உறங்கிலேன்விழிக்கிலேனுணர்வுசென்றொடுங்கிலேன்
திறம்பிலேன் றிகைக்கிலேன் சிலதிசைகளெட்டிலேன்
புறம்புமுள்ளு மெங்கணும் பொதிந்திருந்த தேகமாய்
நிறைந்திருந்த ஞானிகள் நினைப்பதேது மில்லையே.

அங்கலிங்கம் பூண்டுநீ ரகண்டபூசை செய்கிறீர்
அங்கலிங்கம் பூண்டுநீ யமர்ந்திருந்த மார்பனே
யெங்குமோடி யெங்குமெங்கு மீடழிந்து மாய்கிறீர்
செங்கல்செம்பு கல்லெலாஞ் சிறந்துபார்க்கு மூடரே.

சிட்டஞ்சிட்ட மென்றுநீர் தினமுழுகு மூடரே
சிட்டமாகி யல்லவோ திரண்டுகாய மானதும்
சிட்டகாய முமுளே புகழுகின்ற பேயரே
சிட்டவந்து கொண்டலோ தெளிந்ததே சிவாயமே.

மூலநாடி தம்முளே முளைத்தெழுந்த வாயுவை
நாளுநாளு மும்முளே நடுவிருத்தவல்லிரேல்
பாலனாகு மும்முடல் பறந்துபோக லாய்விடும்
ஆலமுண்ட கண்டர்பாத மம்மைபாத முண்மையே.

உந்திமேலே நாலுமூன்று ஓம்நமசி வாயமாஞ்
சந்திசந்தி யென்றுநீர் சாற்றுகின்ற பேயரே
முந்தவந்து நம்முளே மூலநாடி யூடுபோய்
அந்திசந்தி யற்றிட மறிந்துணர்ந்து பாருமே. 478

வன்னிமூன்று தீயினில் வாழுமெங்கள் நாதனுங்
கன்னியானதுள்ளிருக்கக் காதல்கொண்டதெவ்விடஞ்
சென்னிநாலுகையிரண்டு சிந்தையிலிரண்டிலொன்று
உன்னியுன்னி நம்முளே யுய்த்துணர்ந்து பாருமே.

தொண்டுசெய்து நீங்களுஞ் சூழவோடி மாள்கிறீர்
உண்டுமன்று நம்முளே யுற்றுணர்ந்து பார்க்கிலீர்
வண்டுளாவு சோலைசூழ் வாழுமெங்கள் நாதனும்
பண்டுபோல நம்முளே பகுத்திருப்ப னீசனே. 480

அரியதோர் நமச்சிவாய மாதியந்த மானதும்
ஆறிரண்டு நூறுகோடி யளவிடாத மந்திரம்

தெரியநாலு வேதமாறு சாத்திர புராணமுந்
தேடுமாலு மயனுஞ்சர்வ தேவதேவ தேவனே. 481

பரமுனக் கெனக்கு வேறுபயமு மில்லைபாரையா
கரமுனக்கு நித்தமுங் குவித்திடக் கடமையாஞ்
சிரமுருக்கி யமுதளித்த சீருலாவு நாதனே
யுரமெனக்குநீயளித்த வுண்மையுண்மையுண்மையே.

மூலவட்ட மீதிலே முளைத்தவைந் தெழுத்திலே
கோலவட்ட மூன்றுமாய்க் குளிர்ந்தலர்ந்து நின்றதீ
ஞாலவட்ட மன்றுளே நவின்றஞானி மேலதா
யேலவட்ட மாகியே யிருந்ததே சிவாயமே. 483

என்னகத்தி லென்னைநா னெங்குமேயோடி நாடினே
னென்னகத்தி லென்னையன்றி யேதுமொன்ற கண்டிலேன்
மின்னெழும்பி விண்ணகத்தின் மின்னொடுங்கு மாறுபோ
லென்னகத்து ளீசனோடு யானுமல்ல தில்லையே 484

நாலுவேத மோதுகின்ற ஞானமொன் றறிவிரோ
நாலுசாம மாகிய நவின்றஞான போதமாய்
ஆலமுண்ட கண்டனு மயனுமந்த மாலுமாய்ச்
சாலவுன்னி நெஞ்சிலே தரித்ததே சிவாயமே. 485

முச்சதுர மூலமாகி மூன்றதான பேதமா
யச்சதுர மும்முளே யடங்க வாசியோகமா
மெய்ச்சதுர மெய்யுளே விளங்கு ஞானதீபமா
யுச்சரித்த மந்திர மோம்நமசி வாயமே. 486

மூன்று மண்டலத்துளே முச்சதுர மாயமாய்
நாலுவாச லெண்விரவி னடுவுதித்த மந்திரங்
கோவியென்று மைந்துமாய்க் குளிர்ந்தலர்ந்து நின்றநீ
மேலுமேலு நாடினேன் விளைந்ததே சிவாயமே. 487

இடங்கள்பண்ணி சுத்திசெய்தே யிட்டபீட மீதிலே
யடங்கநீறும் பூசல்செய் தருந்தவங்கள் பண்ணுவீர்
ஒடுங்கிகின்ற நாதனு ருதிக்குஞான மெவ்விட
மடங்குகின்ற தெவ்விட மறிந்துபூசை செய்யுமே. 488

புத்தகங் களைச்சுமந்து பொய்களைப் பிதற்றுவீர்
செத்திடம் பிறந்திடம தெங்ஙனென் றறிகிலீர்
அத்தனைய சித்தனை யறிந்துநோக்க வல்லிரோ
வுத்தமத் துளாயசோதி யுணரும்பேர்க் கீர்குமே. 489

அருளிலே பிறந்துதித்து மாயையுருப மாகிய
விருளிலே தயங்குகின்ற வேழைமாந்தர் கேண்மினோ
பொருளிலே தவம்புனைந்து பொருந்திநோக்க வல்லிரேல்
மருளதேது வன்னியின் மறைந்ததே சிவாயமே. 490

கருக்கலந்த காலமே கண்டிருந்த காரணா
வுருக்கலந்த போதலோ வுன்னையா னறிந்ததன்
கருக்கலந்த சோதியைத் தெளிந்துயா னறிந்தபின்
னிருக்கிலே னிறக்கிலே னிரண்டுமற் றிருந்ததே. 491

தன்மசிந்தை யாமளவுந் தவமறியாத் தன்மையாய்க்
கன்மசிந்தை வெயிலுழன்று கருத்துமிழ்ந்த கசடரே
சென்மசென்மந் தேடியுந் தெளிவொணாத செல்வனை
நன்மையாக வும்முளே நயந்துகாண வேண்டுமே 492

கள்ளவுள்ள மேயிருக்க கடந்தஞான மோதுவீர்
கள்ளமுள்ள மறுத்தபோது கதியிதன்றிக் காண்கிலீர்
ருள்ளமே விளக்கிநித்த மொளியணுகவல்லிரேற்
றெள்ளுஞான மும்முளே சிறந்ததே சிவாயமே. 493

காணவேண்டு மென்றுநீர் கடன்மலைக ளேறுவீர்
ஆணவம தல்லவோ வறிவிலாத மாந்தரே
வேணுமென்றவ் விசர்பாத மெய்யுளே தரிப்பிரேற்
றாணுவாக நின்றசீவன் றன்சிவம தாகுமே. 494

அணுவினோ டகண்டமா யளவிடாத சோதியைக்
குணமதாக வும்முளே குறித்துநோக்கின் முத்திபாம்
மணமிதென்ன விரலையெண்ணி மீளொணா மயக்கமாய்த்
துணிவிலாத படியினாற் றொடர்ந்துபூசை செய்குவீர்

எச்சிலெச்சி லென்றுநீ ரிடைந்திருக்கு மேழைகாள்
உச்சிலெச்சி லல்லவோ தாயகாய மானதும்

வைத்தவெச்சி றேனலோ வண்டிணெச்சில் பூவலோ
கைச்சுதாவில் வைத்துடன் கறந்தபாலு மெச்சிலே.

தீர்த்தலிங்க மூர்த்தியென்று தேடியோடுந் தீதரே
தீர்த்தலிங்க முள்ளினின்ற சீவனைத் தெளியுமே
தீர்த்தலிங்க மும்முளே தெளிந்துகாண வல்லிரேற்
தீர்த்தலிங்கந் தானதாய்ச் சிறந்ததே சிவாயமே. 497

ஆடுகொண்டு கூடுசெய் தமர்ந்திருக்கும் வாறுபோற்
றேடுகின்ற செம்பினைத் திடப்படப் பரப்பியே
நாடுகின்ற தம்பிரானு நம்முளே யிருக்கவே
போடுதர்ப்ப பூசையென்ன பூசையென்ன பூசையே.

என்னையற்ப நேரமு மறக்கிலாத நாதனே
ஏகனே யிறைவனே யிராசராச ராசனே
யுன்னையற்ப நேரமு மொழிந்திருக்க லாகுமோ
வூனதுநாட்ட மெனதுநாவி லுதவிசெய்வி ரீசனே.

எல்லையற்று நின்றசோதி யேகமா யெரிக்கவே
வெங்கைபூர ணப்பிரகாச ரேகபோக மாகிய
நல்லவின்ப மோனசாக ரத்திலே யழுத்தியே
நாடொறுத வமிர்தமுண்டு நானழிந்து நின்றநாள்.

ஆனவாற தாயிடு மகண்டமான சோதியை
யூனைகாட்டி யும்முளே புகந்துகாண வல்லிரே
ஞானசாய மாளலா முலகபார மாளலாம்
வான்நாடு மாளலாம் வண்ணநாட ராணையே. 501

நித்தலு மணிதுலக்கி நீடுமூலை புக்கிருந்து
கத்தியே கதறியே கண்கணமூடி யென்பயன்
எத்தனைபே ரெண்ணினு மெட்டிரண்டு பத்தலோ
வத்தனுக் கிதேற்குமோ வறிவிலாத மாந்தரே. 502

எட்டிரண்டுங் கூடியே யிலிங்கமான தேவனை
யட்டதாக வும்முளே மதித்து நோக்கவல்லிரேற்

கட்டமான பிறவியென் கருங்கடல் கடக்கலா
மிட்டமான வெளியினூ டிசைந்திருப்பீர்காண்மினே.

உண்மையான மந்திர பொளியிலே யிருந்திடுந்
தன்மையான மந்திரஞ் சமைந்த ரூபமாகிய
வெண்மையான மந்திரம் விளைந்துநீற தானதே
யுண்மையான மந்திரம தொன்றுமே சிவாயமே. 504

பன்னிரண்டு நாளிருத்திப் பஞ்சவன்ன மொத்திட
மின்னியவ் வெளிக்குணின்று வேரெடுத் தமர்ந்தது
சென்னியான தலத்திலே சிவனின் றியங்கிடும்
பன்னியுன்னி யாய்ந்தவர் பரப்பிரம மாவரே. 505

தச்சிவாயி லுச்சிமே லாயிரந் தலங்களாய்
மூச்சுடரு மூவிரண்டு மூண்டெழுந்த தீச்சுடர்
வச்சிரம தாகியே வளர்ந்துநின்ற தெவ்விடம்
இச்சுடரு மிந்தியமு மேகமான தெங்ஙனே. 506

முத்திசித்தி தொந்தமாய் முயங்குகின்ற மூர்த்தியை
மற்றுதித்த வைம்புலன்க ளாகுமத்தி மப்புலன்
அத்தனித்த காளகண்ட ரன்பினொ டணுகினா
முச்சரித் துளத்திலே யறிந்துணர்ந்து கொண்மினே.

அண்ணலா ரகதியா யநாதிமுன் னநாதியாய்ப்
பெண்ணுமாணு மென்றலோ பிறப்பதாகு முன்னலங்
கண்ணிலாணில் சுக்கிலங் கருத்தொடுங்கி நின்றபின்
மண்ணுளோரும் விண்ணுளோரும் வந்தவாற தெங்ஙனே.

எத்திசைக்கு மெவ்வுயிர்க்கு மெங்களப்பனெம்பிரான்
முத்திஞான வித்துளே முளைத்தெழுந்த செஞ்சுடர்
சித்தினிற் றெளிந்தபோது தேவர்கோயிற் சேர்ந்தன
னத்தனுடல் கண்டபோ தடங்கியாட லுற்றதே. 509

வல்லவாச லொன்பது மருத்தடைத்த வாசலுஞ்
சொல்லும்வாசலோரைந்துஞ்சொல்லவிம்மிநின்றதும்
நல்லவாச லைத்திறந்து ஞானவாச லூடுபோ
யெல்லைவாசல் கண்டபி னினிப்பிறப்ப தில்லையே. 510

ஆதியான தொன்றுமே யநேகரூப மாயமாய்ப்
பேதாபேத மாயெழுந்து சர்வசீவ னானபின்
ஆதியோடு கூடிமீண் டெழுந்துசன்ம மானபின்
சோதியான ஞானியாருஞ் சுத்தமா யிருப்பரோ. 511

வண்டுபூ மணங்களோடு வந்திருந்த தேனெலாம்
உண்டுளே யடங்குவண்ண மோதுலிங்க மூலமாய்க்
கண்டுகண்டு வேரிலே கருத்தொடுங்க வல்லிரேற்
பண்டுகொண்ட வல்வினை பறந்திடுஞ் சிவாயமே. 512

ஓரெழுத்து லிங்கமாக வோதுமக் கரத்துளே
யோரெழுத் தியங்குகின்ற வுண்மையை யறிகிலீர்
மூவெழுத்து மூவராய் முளைத்தெழுந்த சோதியை
நாவெழுத்து நாவுளே நவின்றதே சிவாயமே. 513

தாரதார தாரமுந் தொடர்ந் தெழுந்த தாரமும்
பாரபார பாரமென்று பரிந்திருந்த பாவிகாள்
நேரநேர நேரமு நினைந்திருக்க வல்லிரேல்
தாரதார தாரமுந் தொடர்ந்துகூட லாகுமே. 514

குண்டலங்கள் பூண்டுநீர் குளங்கடோறு மூழ்குநீர்
மண்டுகங்கள் போலநீர் மனத்தின் மாசறுக்கிலீர்
மண்டையேந்து கையரை மனத்திருத்த வல்லிரேற்
பண்டைமா லயன்றொழப் பணிந்துவாழ லாகுமே.

கூடுகட்டி முட்டையிட்டுக் கொண்டிருந்த வாறுபோ
லாடிரண்டு கன்றையீன்ற வம்பலத் துளாடுதே
மாடுகொண்டுவெண்ணெயுண்ணு மானிடப்பசுக்களே
வீடுகண்டுகொண்டபின்பு வெட்டவெளியுங்காணுமே

உள்ளதோ பிறப்பதோ வுயிர்ப்படங்கி நின்றிடும்
மெள்ளவந்து கிட்டநீர் வினவவேண்டு மென்கிறீ
ருள்ளதும் பிறப்பதும் மொத்தபோது நாதமாய்
கள்ளவாசலைத் திறந்து காணவேண்டு மாந்தரே. 517

நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லுமந்த்ர மேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ. 518

சிவவாக்கியர் பாடல்

முற்றிற்று.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

உ

கடவுள் துணை.

# வி ள ம் ப ர ம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை பெரம்பூர் போஸ்டைச்சார்ந்த பெருமாள்பேட்டை வல்லம் பங்காரு செட்டிவீதி, 3-வது, நெ, வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சுந்தரவிலாச அச்சுக்கூடத்தில் தமிழில் தேவையான புத்தகங்களும், அடியிற்கண்டிருக்கும் புத்தகங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

அநுபோகவயித்தியபிரம்மரகசியம்-1-பாகம்விலை ,, 8 ,,
  ஷை இரண்டாம்பாகம் ,, 8 ,,
  ஷை மூன்றாம்பாகம் ,, 8 ,,
  அநுபோகவயித்தியம் 3-காண்டமும் ஒரேகட்டடமாக வேண்டியவர்க்கு விலை } 14 ,,
  3-காண்டமும்ஒரேகட்டடம்வேண்டியவர் 1 4 ,,

அன்னைவயிற்றில் பிறந்ததுமுதல் வன்னிபுரத்திற்கு போமளவும் பிணியில்லாதிருக்கும் நோயில்லாவாழ்வு என்னும் புத்தகம் கிளேஸ்கடிதம் உயர்ந்தபதிப்பு புல்பைண்டாய பைண்டுசெய்திருக்கும்.

புத்தகம் 1-க்கு விலை அணா ,, 12 ,,

பதினெண் சித்தர்களாகிய அகத்தியர் - நந்தி - போகர் புலிப்பாணி-கொங்கணர் - ரோமர் - மச்சர் - சட்டைமுனி - கருவூரார் - அழுகண்ணர் - திருமூலர் - பாம்பாட்டி- இடைக்காடர் - கடுவெளி - அகப்பை-குதம்பை-இராமதேவர் முதலிய மகான்களால் திருவாய்மலர்ந்தருளிய ஞானம்சச் சுருக்கங்களும், பட்டணத்துப்பிள்ளைபாடலும், ஷை ஞானம்-ா, பட்டணத்தார் புலம்பல் - பத்திரகிரியார் புலம்பல் - இவை யாவும் ஒருங்கேதிரட்டி ஞானக்கோவை யென திருநாமஞ் சூட்டி அச்சிடலாயிற்று.

புல்பவுண்டுடன் விலை அணா ,, 8 ,,
சிவவாக்கியர்பாடல் 518-சுத்தப்பிரதி ,, 4 ,,
ஷை ஒவ்வொருசித்தர்பாடல்தனித்தனி ,, ,, 9

இதுகட்கு வி-பி. போஸ்டேசார்ஜ் பிரத்தியேகம்,
பதில்வேண்டுவோர் ரிப்ளைகார்ட் அனுப்பவேணும்.